


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

# பொதுக் கணக்குக் குழு
## (2012-2013)

(பதினான்காவது பேரவை)


நூற்று ஆறாவது அறிக்கை

(பேரவைக்கு அளிக்கப் பெற்ற நாள் : - 8 MAY 2013 )

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை-600 009.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை




# பொதுக் கணக்குக் குழு
## (2012-2013)

(பதினான்காவது பேரவை)

## நூற்று ஆறாவது அறிக்கை

இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1986–1987 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (வருவாய் வரவினங்கள்) உள்ள உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை தொடர்பான பத்திகள் குறித்து பொதுக் கணக்குக் குழு (2000–2001) அளித்த இருநூற்று தொண்ணூற்று ஐந்தாவது அறிக்கையில் (பதினொன்றாவது பேரவை) உள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டும் எடுத்த நடவடிக்கைகள் பற்றிய அறிக்கை.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

# COMMITTEE ON PUBLIC ACCOUNTS
## (2012-2013)

(FOURTEENTH ASSEMBLY)

## ONE HUNDRED AND SIXTH REPORT

REPORT ON THE FURTHER ACTION TAKEN BY THE GOVERNMENT ON THE RECOMMENDATIONS CONTAINED IN THE TWO HUNDRED AND NINETY FIFTH REPORT (ELEVENTH ASSEMBLY) OF THE COMMITTEE ON PUBLIC ACCOUNTS (2000-2001) ON THE PARAS RELATING TO HOME, PROHIBITION AND EXCISE DEPARTMENT IN THE REPORT (REVENUE RECEIPTS) OF THE COMPTROLLER AND AUDITOR-GENERAL OF INDIA FOR THE YEAR 1986-87.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 2012–2013 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் அமைப்பு | .. | v |
| I. முன்னுரை | .. | ix |
| II. அறிக்கை | .. | xiii |
| III. இணைப்புகள் | | |
| இணைப்பு I:— நடவடிக்கை மேலும் தொடர விரும்பாத குழுவின் குறிப்புரைகள் / பரிந்துரைகள் பற்றிய விவரம். | .. | 1–19 |
| இணைப்பு II:— நடவடிக்கை மேலும் தொடர விரும்பும் குழுவின் குறிப்புரைகள் / பரிந்துரைகள் பற்றிய விவர அறிக்கை. | .. | 20–41 |


TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# CONTENTS


| | | Pages |
|---|---|---|
| Composition of the Committee on Public Accounts for the year 2012-2013 | .. | vii |
| I. Introduction | .. | xi |
| II. Report | .. | xv |
| III. Appendices: | | |
| Appendix I:—Statement showing the observations / recommendations which the Committee has desired not to pursue. | .. | 1-19 |
| Appendix II:—Statement showing the observations / recommendations which the Committee has desired to pursue. | .. | 20-41 |


TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றம்
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

## 2012-2013 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் அமைப்பு

## (19-5-2012 ஆம் நாளன்று அமைக்கப் பெற்றது)

**தலைவர்**

1. திரு. ச. இராமச்சந்திரன்

**உறுப்பினர்கள்**

2. மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்,
நிதி அமைச்சர் (அலுவல் காரணமாக)
3. திரு. பி.ஜி. நாராயணன்,
தலைவர், மதிப்பீட்டுக் குழு (அலுவல் காரணமாக)
4. திரு. வி. சோமசுந்தரம்,
தலைவர், பொது நிறுவனங்கள் குழு (அலுவல் காரணமாக)
5. திரு. கே.பி. அன்பழகன்
6. திரு பி.வி. கதிரவன்
7. திரு கடம்பூர் ராஜு
8. திரு வி.பி. கலைராஜன்
9. திரு ம. குணசேகரன்
10. திரு ஒ.கே. சின்னராஜ்
11. திரு எஸ்.எஸ். சிவசங்கர்
12. திரு இரா. துரைக்கண்ணு
13. திரு. கே.பி. பரமசிவம்
14. திரு. சு. பவுன்ராஜ்
15. திரு க. பாண்டியராஜன்
16. திரு கு.வ. மார்க்கண்டேயன்
17. திரு ஆர். ராமமூர்த்தி
18. திருமதி ஆர். ராஜலெட்சுமி
19. திரு எஸ். ஜாண் ஜேக்கப்

**செயலகம்**

| | | |
|---|---|---|
| திரு. அ.மு.பி. ஜமாலுதீன் | .. | செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி | .. | கூடுதல் செயலாளர் |
| செல்வி எஸ். பிலோமினா | .. | துணைச் செயலாளர் |
| திரு. இராம.சோ. கிரிதரன் | .. | சார்புச் செயலாளர் |


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# COMMITTEE ON PUBLIC ACCOUNTS FOR THE YEAR 2012-2013

**(Constituted on 19th May 2012)**

**CHAIRMAN**

1. Thiru S. Ramachandran

**MEMBERS**

2. Hon. ble Thiru O. Paneerselvam,
   Finance Minister (*Ex-Officio*)
3. Thiru P.G. Narayanan
   Chairman, Estimate Committee (*Ex-Officio*)
4. Thiru V. Somasundaram
   Chairman, Public Undertaking Committee (*Ex-Officio*)
5. Thiru K.P. Anblagan
6. Thiru P.V. Kathiravan
7. Thiru Kadambur Raju
8. Thiru V.P. Kalairajan
9. Thiru M. Gunasekaran
10. Thiru O.K. Chinnaraj
11. Thiru S.S. Sivasankar
12. Thiru R. Doraikkannu
13. Thiru K.P. Panamasivam
14. Thiru S. Paunraj
15. Thiru K. Pandiarajan
16. Thiru G.V. Markandayan
17. Thiru R. Ramamurthy
18. Tmt R. Rajalakshmi
19. Thiru S. John Jacob

**SECRETARIAT**

| | | |
|---|---|---|
| Thiru A.M.P. Jamaludeen | .. | Secretary |
| Tmt. R. Amirthavalli | .. | Additional Secretary |
| Selvi S. Philomena | .. | Deputy Secretary |
| Thiru Rm. S. Giridharan | .. | Under Secretary |


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# 1. முன்னுரை

இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1986–1987 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (வருவாய் வரவினங்கள்) உள்ள உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை தொடர்பான பத்திகள் குறித்து பொதுக் கணக்குக் குழு (2000–2001) அளித்த இருநூற்று தொண்ணூற்று ஐந்தாவது அறிக்கையில் (பதினொன்றாவது பேரவை) உள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டும் எடுத்த நடவடிக்கைகள் பற்றிய நூற்று ஆறாவது அறிக்கையை குழு (2012–2013) அதிகாரமளித்துள்ளவாறு பொதுக் கணக்குக் குழுவின் தலைவராகிய நான், குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

2. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1986–1987 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (வருவாய் வரவினங்கள்) உள்ள உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை தொடர்பான பத்திகள் குறித்து பொதுக் கணக்குக் குழு (1992–1993) தனது நூற்றுப்பத்தாவது அறிக்கையை 28–4–1993 அன்று பேரவைக்கு அளித்தது. பொதுக் கணக்குக் குழு (2000–2001) நூற்றுப்பத்தாவது அறிக்கையில் (பத்தாவது பேரவை) உள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றிய தனது இருநூற்று தொண்ணூற்று ஐந்தாவது அறிக்கையை (பதினொன்றாவது பேரவை) 9–11–2000 அன்று பேரவைக்கு அளித்தது.

3 இருநூற்று தொண்ணூற்று ஐந்தாவது அறிக்கையில் (பதினொன்றாவது பேரவை) உள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டும் எடுத்த நடவடிக்கை பற்றிய விவரப்பட்டியிளை 2012–2013 ஆம் ஆண்டிற்கான குழு 27–09–2012 அன்று நடைபெற்ற தனது கூட்டத்தில் ஆய்வு செய்து இவ்வறிக்கைக்கு ஒப்புதல் அளித்தது.

4. குழுவின் பணிகளுக்குப் பெரிதும் உதவிய சட்டமன்றப் பேரவைச் செயலாளர் மற்றும் மாநில முதன்மை கணக்காய்வுத் தலைவர் (வணிகம் மற்றும் வரவினங்கள் தணிக்கை) ஆகியோருக்குக் குழு தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

சென்னை 600 009,
27, செப்டம்பர் 2012,
புரட்டாசி–11,
திருவள்ளுவர் ஆண்டு-2043.

**ச. இராமச்சந்திரன்,**
*தலைவர்,*
*பொதுக் கணக்குக் குழு.*

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# I. INTRODUCTION

I, the Chairman, Committee on Public Accounts having been authorised by the Committee (2012-2013) to submit the Report on its behalf, present this One hundred and sixth Report on the further action taken by the Government on the recommendations contained in the Two Hundred and Ninety Fifth Report (Eleventh Assembly) of the Committee on Public Accounts (2000-2001) on the paras relating to Home, Prohibition and Excise Department in the Report (Revenue Receipts) of the Comptroller and Auditor General of India for the year 1986-1987.

2. The Committee for the year 1992-1993 presented its One Hundred and Tenth Report (Tenth Assembly) on the paras relating to Home, Prohibition and Excise Department contained in the Report (Revenue Receipts) on the Comptroller and Auditor General of India for year 1986-1987 to the year Assembly on 28-4-1993. The Committee for the year 2000-2001 presents its Two Hundred and Ninety Fifth Report (Eleventh Assembly) for the action taken by the Government contained in the One Hundred and Tenth Report (Tenth Assembly) to the Assembly on 9-11-2000.

3. The statement of further action taken by the Government on the recommendations contained in the Two Hundred and Ninety Fifth Report (Eleventh Assembly) was considered and approved by the committee (2012-2013 ) at its meeting held on 27.9.2012.

4. The Committee places on record its appreciation of the valuable assistance rendered by the Secretary, Legislative Assembly and the Principal Accountant General (Commercial and Receipts Audit ) in its deliberations.

Chennai-600 009,
27th September 2012,
Puratasi-11,
Thiruvalluvar Aandu-2043.

**S. Ramachandran,**
*Chairman,*
*Public Accounts Committee.*

TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

## II. அறிக்கை

**இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1986–1987, ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (வருவாய் வரவினங்கள்) உள்ள உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை தொடர்பான பத்திகள் குறித்து பொதுக் கணக்குக் குழு (2000–2001) அளித்த இருநூற்று தொண்ணூற்று ஐந்தாவது அறிக்கையில் (பதினொன்றாவது பேரவை) உள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டும் எடுத்த நடவடிக்கைகள் பற்றிய அறிக்கை.**

---

பொதுக் கணக்குக் குழுவின் (2000–2001) இருநூற்று தொண்ணூற்று ஐந்தாவது அறிக்கையில் (பதினொன்றாவது பேரவை) உள்ள பதினொன்று (11) பரிந்துரைகளில் எட்டு (8) பரிந்துரைகள் அரசு அளித்த பதில்களின் அடிப்படையில் தீர்க்கப்பெற்றதாகக் கருதப்படுகின்றன. இவை குறித்த விவரங்கள் இணைப்பு–I–ல் அளிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய மூன்று (3) பரிந்துரைகள் மீது குழு மேற்கொண்டும் நடவடிக்கை தொடர்வதென முடிவு செய்துள்ளது. இவை பற்றிய விவரங்கள் இணைப்பு–II–ல் அளிக்கப்பட்டுள்ளது.

2. இணைப்பு-II-ல் கண்டுள்ள பரிந்துரைக்களுக்கான பதில்கள் ஆறு மாத காலத்திற்குள் அளிக்கப்பட வேண்டுமென்று குழு விரும்புகிறது.

சென்னை 600 009,
27, செப்டம்பர் 2012,
புரட்டாசி–11,
திருவள்ளுவர் ஆண்டு-2043

**ச. இராமச்சந்திரன்,**
தலைவர்,
பொதுக் கணக்குக் குழு.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

## II. REPORT

**REPORT ON THE FURTHER ACTION TAKEN BY THE GOVERNMENT ON THE RECOMMENDATIONS CONTAINED IN THE TWO HUNDRED AND NINETY FIFTH REPORT (ELEVENTH ASSEMBLY) OF THE COMMITTEE ON PUBLIC ACCOUNTS (2000-2001) ON THE PARAS RELATING TO HOME, PROHIBTION AND EXCISE DEPARTMENT IN THE REPORT (REVENUE RECEIPTS) OF THE COMPTROLLER AND AUDITOR-GENERAL OF INDIA FOR THE YEAR 1986 -1987.**

---

Out of Eleven (11) recommendations contained in the Two Hundred and Ninety Fifth Report (Eleventh Assembly) of the Committee on Public Accounts (2000-2001), Eight (8) recommendations has been treated as settled by the Committee in the light of the replies furnished by the Government vide Appendix-I for details. The Committee has decided to pursue further the remaining Three (3) recommendations vide Appendix-II for details.

2. The Committee desires that replies to the recommendations contained in the Appendix-II should be furnished within six months.

Chennai-600 009,
27th September 2012,
Puratasi-11,
Thiruvalluvar Aandu-2043.

**S. Ramachandran,**
*Chairman,*
*Public Accounts Committee.*

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

## III - APPENDICES

## APPENDIX - I

### STATEMENT SHOWING THE OBSERVATIONS / RECOMMENDATIONS WHICH THE COMMITTEE HAS DESIRED NOT TO PURSUE

### HOME, PROHIBITION AND EXCISE DEPARTMENT

| *Serial No.* (1) | *Recommendation No.* (2) | *Paragraph No.* (3) | *Subject.* (4) | *Comments of the Committees .* (5) |
|---|---|---|---|---|
| 1 | 3 | 3.4 | Short Collection of fees | The Committee wishes to point out the recommendation already made in respect of recommendation No.1 (para1.9) contained in 188th Report (XI Assembly) presented to the Legislature on 5th May 1999.<br><br>The committee also wanted to know whether any consultation in this regard was made with the Law Department and also to state whether the instructions issued by Finance Department, dated 30th March, 1983 was followed in this case. |

| *Further Reply from the Department* (6) | *Further Comments of the committee* (7) |
|---|---|
| Reply enclosed in the Annexure | Treated as settled. |


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

குழுவின் குறிப்புரைகள்/பரிந்துரைகள்

(5)

5-5-1999 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவையில் வைக்கப்பட்ட 188 ஆவது அறிக்கையில் (11 ஆவது பேரவை) பரிந்துரை எண்.1 (பத்தி 1.9) இல் சொல்லப்பட்ட பரிந்துரையை குழு கூட்டிக்காட்ட விரும்புகிறது.

இது குறித்து சட்டத் துறையுடன் கலந்தாலோசிக்கப்பட்டதா என்பது குறித்தும், 30-3-1983 நிதித் துறையால் பிறப்பிக்கப்பட்ட அறிவுரைகள் இந்த நோ்வில் பின்பற்றப்பட்டதா என்பது குறித்தும் அறிய குழு விரும்புகிறது.

| துறையின் பதில் | குழுவின் கருத்துரைகள் |
|---|---|
| (6) | (7) |
| இணைப்பில் பதில் இணைக்கப்பட்டுள்ளது. | தீர்க்கப்பெற்றதாகக் கருதப்படுகிறது. |

| Serial No. | Recommendation No. | Paragraph No. | Subject. | Comments of the Committees |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 2 | 4 | 3.5 | Short Collection of fees | The Committee recommends that the Department should avoid such mistakes in future. |

| Furtehr Reply from the Department | Further Comments of the committee |
|---|---|
| (6) | (7) |
| The recommendations of the committee is noted for future guidance. In this connection it is pointed out that the Accountant General has dropped all the pending objections of this nature in the Audit reports from 1996-97 to 1999-2000 | Treated as settled. |

*(5)*

துறை இனிமேல் இத்தகைய தவறுகளைத் தவிர்க்க வேண்டும் என்று குழு பரிந்துரைத்துள்ளது.

இது தொடர்பாக நிலுவைகளை வசூலிப்பதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து மூன்று மாதங்களுக்குள் மேற்கொண்டும் அறிக்கை ஒன்றைப் பெறக் குழு விரும்புகிறது.

*துறையின் பதில்*

*(6)*

இனி வழிகாட்டுதலுக்காக குழுவின் பரிந்துரைகள் கவனத்தில் கொள்ளப்பட்டன. மாநில கணக்குத் துறைத்தலைவர் 1996–97 முதல் 1999–2000 ஆண்டுகளின் அறிக்கைகளுக்கான தணிக்கையில் இத்தன்மைக்காக நிலுவையாக இருந்த மறுப்புரைகள் அனைத்தையும் தள்ளுபடி செய்து விட்டார் என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(ஆங்கில மாதம் ஒவ்வொன்றுக்கும் அதற்கான பகுதிக்கும்) (பயணிப் பேருந்துகளுக்கும் 20 இருக்கை வசதிகள் கொண்டுள்ள ஒப்பந்தப் பேருந்துகளுக்கும்)

மொத்த தொகை ரூ.20,700/–ல் ரூ.575/– ஏற்கெனவே வசூலிக்கப்பட்டது. சென்னை–41, சென்னை (தெற்கு) வட்டாரப் போக்குவரத்து அதிகாரி மேற்கொண்டும் ரூ.1500/– வசூலித்தார். எஞ்சியுள்ள தொகையான ரூபாய் 18,250/– விரைவில் வசூலிக்கப்படும் மீதமுள்ள தொகையை விரைந்து வசூலிப்பதற்காக சென்னை (தெற்கு) வட்டாரப் போக்குவரத்து அதிகாரிக்கு போக்குவரத்து ஆணையாளர் கண்டிப்பான உத்திரவுகள் பிறப்பித்துள்ளார்.

*குழுவின் கருத்துரைகள்*

*(7)*

தீர்க்கப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

| Serial No. (1) | Recommendation No. (2) | Paragraph No. (3) | Subject. (4) | Comments of the Committees . (5) |
|---|---|---|---|---|
| 3 | 13 | 11.9 | Incorrect grant of exemptionfrom payment of excise duty on rectified spirit. | The Committee notes that section 18 (H) cannot be stretched to have retrospective effect. by implication, when it is not specifically mentioned in section 54 (2-A). Committee is of the opinion that in the absence of specific provision in the Prohibition Act, (for granting exemption retrospectively) the exemption given is not in order because when clause (ii) was introduced, there was no section 18- H. Hence, clause (ii) cannot be construed to cover 18 H after the introduction of clause (iii) in May 1981.<br><br>Further the Committee wishes to point out that in several cases it has been judicially held that while a liberal interpretation of provisions levying tax is possible in favour of the assessee, the grant of an exemption has to be construed strictly in favour of the state and it is not proper to extend the scope of the Government Order to any other matters which are not expressly stated in the Government Order. This ruling is equally valid in the interpretation of statutes also. Therefore the committee is of the view that any amendment to the Act as suggested by Law Department in respect of grant of retrospective exemptions may be taken up by Government in consultation with Central Board of Indirect Tax Central Excise Duty and a report may be furnished to the committee within three months. |

| Reply from the Department | Further Comments of the committee |
|---|---|
| (6) | (7) |
| A perusal of the objection raised by the Public Accounts Committee does not seem to be in accordance with the provisions made in the Act. It may be stated that section 18 (B) providing for the levy of excise duty on excisable articles was inserted by Tamil Nadu Act 23 of 1981, while sub section (3) to that section was added by Act 51 of 81 which provides that 18 (A) will not apply to the matters specified under Sec. 18 (B) on and from 1st May 1981. Sec.18 (H) was also inserted by the same Act, namely Tamil Nadu Act 51 of 1981. It is clear that Sec. 18 (B) (3) and 18 (H) were introduced by the same Act namely Tamil Nadu Act 51 of 1981. The Committee also is fully aware when it says that 18 (B) was introduced from 1st May 1981. | Treated as settled. |
| The only question is whether the State Government has got the power to issue notification under section 18 (H) with retrospective effect or not. It is true that Section 18 (H) is silent about the power to give retrospective effect. To give retrospective effect, express power is necessary, but this power is traceable to Sect. 54 (2A) which expressly provided that a rule or notification under the Act, may be made or issued so as to have retrospective effect on and from the date not earlier than the dates referred to therein. The sections referred to in clauses (i) (ii) and (iii) of under sub section 2 (A) only refer to the special retrospection in respect of powers excisable under section 17 (B) , 17 (C) 17(D), 17 (E) 18 (B) and 18 (C). The absence of reference to Sec. 18 (H) does not mean that a natification issued under sec 18 (H) can have no retrospective operation at all. Such an interpretation will go against the general power contained in sub sec. 2 (A) sub section 2 (A) in the opening portion uses the expression "A rule or notification under this Act". Clauses (i) and (ii) of sub section 2 (A) also do not refer to any section. | |
| The intention of sub section 2 (A) of Sec. 54 is that a rule or a notification can have retrospective operation subject to the restrictions contained in clauses (i) to (iii) If the interpretation placed by the committee is to be accepted then it would mean that the rule made may not also have retrospective operation. This view may not be the intention of the legislature to provide that a rule or a notification can be given retrospective effect. The only restriction is the retrospective operation | |

*Reply from the Department—cont*

*(6)*

in relation to matters referred to in the clauses (i) (ii) and (iii) of section 2 -A shall not take effect beyond the dates specified therein. In any case Sec. 18 (A)Sec. (B) and Sec 18 (H) were introduced from 1st May 1981. The Government have given retrospective effect only from 29th May 1982. In this view, the State Government has got every power to give retrospective effect in the light of the provisions made in Sec. 54 (2A) The absence of specific reference to Sec. 18 (H) in sub sec 2 (A) of Sec 54 will not take away the general power to give retrospective effect provided for in the opening of sub section (2-A) itself.

Hence, the para may be treated as settled.

*குழுவின் குறிப்புரைகள்/பரிந்துரைகள்*

*(5)*

54(2–ஏ) பிரிவில் இதுபற்றித்திட்டவட்டமாக குறிப்பிட்டிராத நிலையில் உட்கிடையாகப் பொருள் கொள்ளச் செய்வதன் மூலம் 18 (எச்) பிரிவை முன் தேதியிட்டு செயல்வடிவம் பெறுமாறு விரிவுபடுத்த இயலாது என்று குழு அறிகிறது. மதுவிலக்கு சட்டத்தில் முன் தேதியிட்டு விலக்கை அனுமதிப்பதற்காக திட்டவட்டமாகக் குறிப்பிடும் விதித்துறை இல்லாத நிலையில் அளிக்கப்பட்ட விலக்கு, முறையானதல்ல என்றும் எனினில் இப்பிரிவுகள் (II) பகுதியைச் சேர்ப்பதற்கு அறிமுகப்படுத்தியபோது, சட்டத்தில் 18 (எச்) பிரிவு இல்லை என்றும் குழு அதனுடைய கருத்தைத் தெரிவித்துள்ளது. எனவே 1981 மேத்திங்களில் (III) பகுதி அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் (II) பகுதி 18 பிரிவையும் உள்ளடக்குவதாகப் பொருள் கொள்ள இயலாது.

வரி விதிக்கப்பட்டவருக்குச் சாதகமாக வரி விதிப்பதற்குரிய விதிதுறைக்குத் திறந்த மனதுடன் பொருள் விளக்கம் அளிப்பது சாத்தியமானதே என்றும் அதே சமயத்தில் விளக்களிப்பதே மாநில அரசுக்கு சாதகமாகவே பொருள் கொள்ளவேண்டும் என்றும், அரசாணையில் வெளிப்படையாக தெரிவிக்கப்படாத ஏனைய

பொருள்கள் எவற்றிற்கும் அரசாணையில் ஆய்வு வரம்பை நீட்டிப்பது முறையாகாது என்றும் பல்வேறு வழக்குகளில் நீதிமன்றங்கள் தீர்ப்பளித்துள்ளன என்பதை குழு குறிப்பிட விழைகிறது. இந்த தீர்ப்பு எழுத்துவடிவச் சட்டத்தின் பொருள் விளக்கத்திற்கும் அதேபோன்று செல்திறன் உடையதாகும். எனவே, முன் தேதியிட்டு விலக்களிப்பது தொடர்பாக சட்டத்துறை கருத்து தெரிவித்தவாறு சட்டதில் யாதொரு திருத்தத்தையும் செய்ய வேண்டுமாயின் இது தொடர்பாக மத்திய மறைமுக வரி விதிப்பு மத்திய ஆயத்தீர்வை குழுவை கலந்தாலோசித்து அரசு அத்திருத்தத்தை மேற்கொள்ளலாம் என்றும் இது தொடர்பாக அறிக்கை ஒன்றை மூன்று மாதங்களுக்குள் குழுவிற்கு அனுப்பி வைக்கவேண்டுமென்றும் குழு கருத்துத்தெரிவித்துள்ளது.

| துறையின் பதில் | குழுவின் கருத்துரைகள் |
|---|---|
| (6) | (7) |
| பொதுக்கணக்கு குழு தெரிவித்த மறுப்புரையைப் பரிசீலித்ததில் அது சட்ட விதித்துறைக்கேற்ப இருப்பதாக தோன்றவில்லை. ஆயத்தீர்வை விதிக்கத்தக்க பொருள்கள் மீது ஆயத்தீர்வை விதிப்பதற்கு வகை செய்யும், 18 (B) பிரிவு , தமிழ்நாடு 1981–ஆம் ஆண்டு 23–ஆம் சட்டத்தின் மூலம் சேர்க்கப்பட்டது 18 (A) பிரிவு, 1.5.1981 –லிருந்து 18 (B)– இன் கீழ் குறிப்பிடக்கூடியவற்றுக்கு பொருந்தாது என்று கூறும் அதன் (3) உட்பிரிவு, 1981 –ஆம் ஆண்டு 51–ஆம் சட்டத்தின் மூலம் சேர்க்கப்பட்டது: 18 (H) பிரிவும், அதே சட்டத்தின் மூலம், அதாவது, தமிழ்நாடு 1981–ஆம் ஆண்டு 51–ஆம் சட்டத்தின் மூலம்தான் சேர்க்கப்பட்டது. ஆகவே, 18 (B) (3) மற்றும் 18 (H) பிரிவுகள் அதே சட்டத்தின் மூலமே அதாவது, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு 51–ஆம் சட்டத்தின் மூலமே சேர்க்கப்பட்டுள்ளன என்பது இதனால் தெளிவாகிறது. பிரிவு 18 (B) 1-5-1981 லிருந்து அறிமுகப்படுத்தப்பட்டது என்று கூறியுள்ளதிலிருந்தே குழு இதனை நன்கு அறிந்துள்ளது என்பது தெளிவாகிறது. 18 (H) பிரிவின் கீழ் முன்தேதியிட்டு அறிவிக்கை வெளியிடுவதற்கு மாநில அரசுக்கு அதிகாரம் உண்டா இல்லையா என்பதே ஒரே வினாவாகும். முன் தேதியிட்டு செயல்வடிவம் கொடுப்பதற்கான அதிகாரம் பற்றி 18 (H) பிரிவில் ஏதும் சொல்லப்படவில்லை என்பது உண்மையே. முன்தேதியிட்டு செயல்வடிவம் கொடுப்பதற்கு, வாய்மொழியாகவோ வரைமொழியாகவோ வெளிப்படையான அதிகாரம் (Express power) அவசியமாகும். | தீர்க்கப்பெற்றதாகக் கருதப்படுகிறது. |

ஆனால் இந்த அதிகாரம் 54 (2–ஏ) பிரிவில் அளிக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் கீழ் கடந்த தேதியிலிருந்து செயல்வடிவம் பெறுகின்ற வகையில் ஒரு விதி அல்லது அறிவிக்கை இயற்றப்படலாம். அல்லது வெளியிடப்படலாம் என்றும் ஆனால் அது, இதில் குறிப்பிடப்பட்ட நாள்களுக்கு முற்படாத நாள் அன்று மற்றும் அந்நாள் முதற்கொண்டு செயல்வடிவம் பெறவேண்டும் என்றும் இப்பிரிவில் வெளிப்படையாக கூறப்பட்டுள்ளது. 2(A) உட்பிரிவின் கீழ் (i) (ii) (iii) ஆகியபகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளான 17(B) 17(C) 17(D) 17 (E) 18 (B), 18(C) ஆகியவற்றின் கீழ் செலுத்தத்தக்க அதிகாரங்களைப் பொறுத்தமட்டில், சிறப்பாக முன்தேதியிட்டு அளிப்பதையே குறிக்கிறது. 18 (H) பிரிவில் இதுபற்றிய குறிப்பு இல்லாததால், இப்பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட அறிவிக்கைக்கு முன்தேதியிட்டு செயல்வடிவம் கொடுக்க இயலாது என்று பொருள் ஆகாது. அவ்வாறு பொருள்கொள்வது உட்பிரிவு 2 (A) ல் கண்டுள்ள பொது அதிகாரத்திற்கு முரணானதாகிவிடும். 2 (A) உட்பிரிவின், தொடக்கப்பகுதியில் இச்சட்டத்தின் கீழான ஒரு விதி அல்லது அறிவிக்கை என்று சொற்றொடர் பயன்படுத்தப்படுகிறது. உட்பிரிவு 2 (A)–ன் (i) (ii) பகுதிகள் எந்தப்பிரிவினைப்பற்றியும் குறிப்பிடவில்லை (i) முதல் (ii) வரையிலான பகுதிகளில் குறிப்பிடப்பட்ட வரையறைகளுக்கு உட்பட்டு, ஒரு விதி அல்லது அறிவிக்கைக்கு முன்தேதியிட்டு செயல்வடிவம் கொடுக்கலாம் என்பதே 54–ஆம் பிரிவைச்சேர்ந்த 2(A) உட்பிரிவின் நோக்கம். குழு அளித்த பொருள்விளக்கத்தை ஏற்றுக்கொள்வதாயின் இயற்றப்பட்ட விதிக்கும் முன்தேதியிட்டு செயல்வடிவம் கொடுக்க இயலாது என்றே பொருள்படும். ஒரு விதிக்கு அல்லது அறிவிக்கைக்கு, முன் தேதியிட்டு செயல்வடிவம் கொடுக்கலாம். என்று வகைச்செய்யும் சட்டமன்றத்தின் நோக்கம் இதுவாக இராது. 2 (A) பிரிவைச் சேர்ந்த (i) (ii) (iii) பகுதிகளில் குறிப்பிடப்பட்ட விஷயங்கள் தொடர்பாக முன்தேதியிட்டு செயல்வடிவம் அளிக்கப்படும் நாள் அதில் குறிப்பிடப்பட்ட நாள்களையும் தாண்டியதாக இருக்கக் கூடாது என்பதே இது தொடர்பான ஒரே ஒரு வரையறை ஆகும் 18(A), (B) மற்றும் 18 (H) பிரிவு 1-5-1981–ல் இருந்து அறிமுகப்படுத்தப்பட்டது இதற்கு அரசு 29-5-1982–ல் இருந்துதான் செயல்வடிவம் கொடுத்துள்ளது. பிரிவு 54(2-A)-ன் விதித்துறைகளின் அடிப்படையில் பார்க்குமிடத்து முன் தேதியிட்டு செயல்வடிவம் கொடுக்க மாநில அரசுக்கு அதிகாரமுண்டு, 54–ஆம் பிரிவைச் சேர்ந்த 2(A) உட்பிரிவில் 18 (H) பிரிவு பற்றிய திட்டவட்டமான குறிப்பு இல்லாததாலேயே, 2(A) உட்பிரிவின் தொடக்கத்தில் அளிக்கப்பட்டுள்ள முன்தேதியிட்டு செயல்வடிவம் கொடுப்பதற்கான பொது அதிகாரம் இல்லையென்று ஆகிவிடாது.

எனவே, இப்பத்தி முடிவு செய்யப்பட்டதாகக் கருதப்படலாம்.

| Serial No. | Recommendation No. | Paragraph No. | Subject. | Comments of the Committees |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 4 | 15 | 12.9 | Non-recovery of government Dues from defaulters | The Committee observes that the arrears relate to a back period of 12 to 15 years. The committee recommends that (i) special and effective measures should be evolved at least now and followed up diligently to collect the dues or to write off the amount wherever it has become irrecoverable.<br><br>(ii) The stage at which the matter stands at present may also be communicated to the committee. |

| Reply from the Department | Further Comments of the committee |
|---|---|
| (6) | (7) |
| Government wants to collect the dues, hence demand has been raised and watched separately in the office of the Commissioner of Prohibition and Excise's. To speed up the collection instructions have been issued to the subordinates.<br><br>Committee's observations are noted for further guidance and necessary appropriate and timely action against persons whose action leads to such loss will be taken in future.<br><br>The collectable balance as on 30.06.2004 was Rs. 48.89 Crores. This has been watched separately in the office of the Commissioner of Prohibition and Excise.<br><br>In this connection the following processing measures have been taken for the speedy collection of pending arrears.<br><br>1) The DEO/ Revenue Divisional Officers have been instructed to contact the defaulter residing in Other Districts/States in; person to collect the arrears due from then.<br><br>2) The Divisional Excise officers have been instructed to go to High Court, Madras and see the Government Pleader in respect of pending cases. They should ascertain the present stage of the cases and take action to vacate the stay if any granted by the court so as to proceed the collection work immediately. | As the position of arrears in being pursued in subsequent Audit Reports, the para should be treated as settled. |

*Reply from the Department—cont*

*(6)*

3) The collectors were instructed to send daily report by FAX to the office of the Commissioner of Prohibition and Excise regarding the every day collection of excise arrears.

4) The Collector's were instructed to achieve 2 % collection of pending arrears in every month.

5) The Collectors were asked to involve the Revenue Divisional Officer's Taluk Tahisildars and Firka Revenue Inspectors also in collecting the huge excise arrears from the defaulters of Ex-licensee of erstwhile Arrack and Toddy shops.

6) The collectors were instructed to charge sheet to those officers who have failed to collect the excise arrears or who have shown poor collection and inform the action taken against them to the office of the Commissioner of the Prohibition and Excise then and there without fail.

7) The Collectors of all Districts were instructed to review the progress of collection of excise arrears during the monthly DRA meting.

Since necessary effective steps have already been taken to collect the excise arrears, the committee may be requested to drop this comments.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
தமிழ்நாடு சட்டமன்றம்
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

குழுவின் குறிப்புரைகள்/பரிந்துரைகள்

(5)

(i) இந்த நிலுவைகள் கடந்த 12 முதல் 15 ஆண்டு காலத்திற்கானதாகும் என்றும் குழு கருதுகிறது. நிலுவைகளை வசூலிக்க சிறப்பாகவும், முனைப்பாகவும் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டம் வகுத்து அவற்றை மேற்கொள்ளவேண்டுமென அல்லது அவற்றை வசூலிக்க இயலாத இடங்களில் அவற்றைக் கணக்கிலிருந்து தள்ளுபடி செய்ய வேண்டுமெனவும், குழு பரிந்துரைக்கிறது.

(ii) இந்த பிரச்சினை தற்போது எந்நிலையில் உள்ளது என்பதையும் குழுவிற்கு தெரிவிக்கவேண்டும்.

துறையின் பதில்

(6)

பாக்கித்தொகைகளை வசூலிக்க அரசு விரும்பியது. எனவே, கேட்பு அறிவிப்பு அனுப்பப்பட்டு, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையாளர் அலுவலகத்தில் தனியே கண்காணிக்கப்பட்டு வருகிறது. வசூலை விரைவுபடுத்த சார்நிலைப் பணியாளர்களுக்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மேற்கொண்டும் கடைப்பிடிப்பதற்காக குழுவின் கருத்துக்கள் கருத்தில் கொள்ளப்பட்டன. இத்தகைய இழப்பு ஏற்படும் வகையில் நடவடிக்கை எடுத்தவர்கள் மீது அவசியமான பொருத்தமான நடவடிக்கை இனி உரியகாலத்தில் எடுக்கப்படும். 30.6.2004–ஆம் நாள் நிலவரப்படி வசூலிக்கத்தக்க தொகை ரூ.48.89 கோடியாகும் இது, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையாளர் அலுவலகத்தில் தனியே கண்காணிக்கப்பட்டுவருகிறது. பாக்கித் தொகைகளை விரைந்து வசூலிக்க இது தொடர்பாக பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(1) ஆயத்தீர்வை செலுத்தத் தவறியவர்கள் பிற மாவட்டங்களில்/ மாநிலங்களில் வசிக்கும் நேர்வில், அவர்களிடமிருந்து பாக்கித் தொகைகளை வசூலிப்பதற்காகஅவர்களுடன் நேரடியாக தொடர்பு கொள்ளுமாறு கோட்ட ஆயத்துறை அலுவலருக்கு /கோட்டாட்சியருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(2) நிலுவையாக உள்ள வழக்குகளைப் பொறுத்தவரையில், சென்னை உயர்நீதி மன்றத்திற்குச் சென்று, அரசு வழக்குரைஞரைப் பார்க்குமாறு கோட்ட ஆயத்துறை அலுவலர்களுக்கு உத்திரவிடப்பட்டுள்ளது. வழக்குகளின் தற்போதைய நிலைமையை அவர்கள் உறுதியாக அறிந்துகொண்டு நீதிமன்றம் தடையாணை ஏதேனும் பிறப்பித்திருப்பின், அதனை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும், அப்போதுதான் வசூல் பணியை உடனடியாகத் தொடங்க இயலும்.

குழுவின் கருத்துரைகள்

(7)

நிலுவைத் தொகையின் நிலை குறித்து பின்வரும் தணிக்கை அறிக்கைகளில் தொடர் நடவடிக்கையில் இருப்பதால் இப்பத்தி தீர்க்கப்பெற்றதாகக் கருதப்பெற்றது.

(3) ஆயத்தீர்வை பாக்கிகளின் அன்றாட வசூல் தொடர்பாக மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையாளரின் அலுவலகத்திற்கு நிகரி மூலம் அன்றாடம் அறிக்கை அனுப்புமாறு மாவட்ட ஆடசியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(4) ஒவ்வொரு மாதமும் நிலுவைத் தொகையில் 2% வசூலை எய்துமாறு மாவட்ட ஆட்சியர்களுக்கு உத்தரவிடப்பட்டது.

(5) ஆயத்தீர்வையைச் செலுத்தத்தவறிய சாராய–கள் கடைகளின் முன்னாள் உரிமதாரர்களிடமிருந்து பெரும் ஆயத்தீர்வை பாக்கியை வசூலிப்பதில் கோட்டாட்சியர்கள், வட்டாட்சியர்கள் பிர்கா வருவாய் ஆய்வாளர்களையும் ஈடுபடுத்துமாறு மாவட்ட ஆட்சியர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

(6) ஆயத்தீர்வை பாக்கித் தொகைகளை வசூலிக்கத் தவறிய அல்லது மிகக் குறைவாக வசூல் கணக்கைக் காட்டிய அதிகாரிகள் மீது குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யுமாறும், அவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றி தவறாமல் அவ்வப்போது மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையாளர் அலுவலகத்திற்குத் தெரிவிக்குமாறும் மாவட்ட ஆட்சியர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

(7) மாதந்தோறும் நடைபெறும் மாவட்ட வருவாய் நிருவாக ஆய்வுக்கூட்டத்தில் ஆயத்தீர்வை பாக்கி வசூலில் ஏற்பட்ட முன்னேற்றம் பற்றி ஆய்வு செய்யுமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. ஆயத்தீர்வை பாக்கிகளை வசூலிப்பதற்குத் தேவையான செம்மையான நடவடிக்கைகள் ஏற்கெனவே எடுக்கப்பட்டுள்ளதால், இக்கருத்துருக்களை கைவிடுமாறு குழு கேட்டுக்கொள்ளப்படலாம்.

| Serial No. (1) | Recommendation No. (2) | Paragraph No. (3) | Subject. (4) | Comments of the Committees . (5) |
|---|---|---|---|---|
| 5 | 16 | 12.13 | Non-recovery of Government dues from the defaulters. | The Committee recommends that action should be taken against the person responsible for the omission to follow the rules even after being pointed out by Audit. and that inspection by higher officers and internal audit should be tightened to see that the various rules are observed strictly in future. |

| Reply from the Department (6) | Further Comments of the committee (7) |
|---|---|
| The committee's observations are noted for future guidance. | Treated as settled |

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

குழுவின் குறிப்புரைகள்/பரிந்துரைகள்

(5)

தணிக்கையில் சுட்டிக்காட்டியிருந்த பிறகும்கூட, விதிகளைப் பின்பற்றாமல் விடுபடுதவற்குக் காரணமாக இருந்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் உயர் அதிகாரிகளைக் கொண்டு ஆய்வு நடத்தவேண்டும் என்றும், பல்வேறு விதிகள் இனி கண்டிப்பாக பின்பற்றப்படுகின்றனவா என்பதைக் கவனிக்கத் துறை தணிக்கை முடுக்கிவிடப்படவேண்டும் என்றும் குழு பரிந்துரைக்கிறது.

துறையின் பதில்

(6)

மேற்கொண்டும் கடைப்பிடிப்பதற்காக குழுவின் கருத்துக்கள் கருத்தில் கொள்ளப்பட்டன.

குழுவின் கருத்துரைகள்

(7)

தீர்க்கப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

| Serial No. | Recommendation No. | Paragraph No. | Subject | Comments of the Committees |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 6 | 18 | 13.5 | Short Computation of rental. | The Committee desires that the department should henceforth take appropriate and timely action against persons whose action leads to such heavy and irrecoverable arrears and other irregularities to avoid loss of revenue. |

*Reply from the Department*

*(6)*

Committee's observations are noted for further guidance and necessary appropriate and timely action against persons whose action leads to such loss will be taken in future.

*Further Comments of the committee*

*(7)*

Treated as settled.

*குழுவின் குறிப்புரைகள்/பரிந்துரைகள்*

*(5)*

இனி வருவாய் இழப்பு ஏற்படுவதைத் தவிர்க்க அதிக அளவில் நிலுவை வசூலிக்க முடியாதவை மற்றும் ஏனைய முறைகேடுகளுக்குக் காரணமாக இருந்தவர்கள் மீது உரிய பொருத்தமான நடவடிக்கையைத் துறை எடுக்க வேண்டும் என்று குழு விரும்புகிறது.

*துறையின் பதில்*

*(6)*

மேற்கொண்டும் கடைப்பிடிப்பதற்காக குழுவின் கருத்துக்கள் கருத்தில் கொள்ளப்பட்டன. இத்தகைய இழப்பு ஏற்படும் வகையில் காரணமாக இருந்தவர்கள் மீது அவசியமான பொருத்தமான நடவடிக்கை இனி உரிய காலத்தில் எடுக்கப்படும்.

*குழுவின் கருத்துரைகள்*

*(7)*

தீர்க்கப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

| Serial No. (1) | Recommendation No. (2) | Paragraph No. (3) | Subject. (4) | Comments of the Committees . (5) |
|---|---|---|---|---|
| 7 | 19 | 14.3 | Uncollected Revenue | The Committee had observed in April 1983 (22nd Report presented to the Assembly on 18th April 1983) that immediate action should be taken to get early decisions in the court cases. The Committee is distressed to note that action taken by the department had been tardy and it had taken nearly 10 to 12 years for the department to move in the matter despite accumulation of amount due for collection. The committee hopes that the department should act quickly atleast now and get early decisions with a view to reducing the out standings and like to have a report within 2 months. |

*Reply from the Department*

*(6)*

The collectable balance as on 30.06.2004 was Rs. 48.09 Crores. This has been watched separately in the office of the Commissioner of Prohibition and Excise.

In this connection the following processing measures have been taken for the speedy collection of pending arrears.

1. The DEO/Revenue Divisional officer have been instructed to contact the defaulter residing in Other Districts/States in personally to collect the arrears due from them.

2. The Divisional Excise Officers have been instructed to go to High Court, Madras and see the Government Pleader in respect of pending cases. They should ascertain the present stage of the cases and take action to vacate stay if any granted by the court so as to proceed to collection work immediately.

3. The collectors were instructed to send daily report by Fax to the office of the Commissioner of prohibition and Excise regarding the every day collection of excise arrears.

*Further Comments of the committee*

*(7)*

As the arrears position is being pursued through subsequent Audit Reports the para treated as settled.

4. The Collectors were instructed to achieve 2 % collection of pending arrears in every month.

5. The Collectors were asked to involve the Revenue Divisional Officers Taluk Tahsildars and Firka Revenue Inspectors also in collecting the huge excise arrears from the defaulters of Ex-licensee of erstwhile arrack and Toddy shops.

6. The Collectors were instructed of charge sheet to those officers who have failed to collect the excise arrears or who have shown poor collection and inform the action taken against them to the office of the Commissioner of Prohibition and Excise then and there without faill.

7. The Collectors of all Districts were instructed to review the progress of collection of excise arrears during the monthly DRA meting. Since necessary effective steps have already been taken to collect the excise arrears, the committee may be requested to treat this comments as settled.

(Replies Received from Home Department vide U.O. Note 19790/genl/ 2006-1, dated 26-4-2006)

TRUTH ALONE TRIUMPHS

*(5)*

நீதிமன்ற வழக்குகளில் விரைவாக முடிவுகளைப் பெற உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குழு 1983 ஏப்ரலில் கருத்து தெரிவித்திருந்தது. (18.4.1983–ஆம் நாளன்று பேரவையில் வைக்கப்பட்ட 22–ஆம் அறிக்கை) துறை எடுத்த நடவடிக்கை மெத்தனமானதாக இருந்ததென்றும் வசூலிக்கவேண்டிய நிலுவைத் தொகை அதிக அளவில் சேர்ந்துவிட்ட போதிலும் இதில் துறை நடவடிக்கை எடுக்க சுமார் 10 முதல் 12 ஆண்டுக் கால அளவு ஆனது என்றும் குழு வருத்தத்துடன் குறிப்பிடுகிறது. துறை இனியாவது விரைவாக செயல்பட்டு நிலுவைகளைக் குறைக்க விரைவில் முடிவு எடுக்கும் என்று குழு நம்புகிறது. 2 மாதத்திற்குள் அறிக்கை ஒன்றை அளிக்க குழு விரும்புகிறது.

*துறையின் பதில்*

*(6)*

30.6.2004–ஆம் நாள் நிலவரப்படி வசூலிக்கத் தக்க எஞ்சிய தொகை ரூ.48.99 கோடி ஆகும். மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையாளர் அலுவலகத்தில் இது குறித்து தனியே கண்காணிக்கப்படுகிறது. பாக்கித் தொகைகளை விரைந்து வசூலிக்க இது தொடர்பாக பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(1) ஆயத்தீர்வை செலுத்தத் தவறியவர்கள் பிற மாவட்டங்களில்/ மாநிலங்களில் வசிக்கும் நேர்வில் அவர்களிடமிருந்து பாக்கித் தொகைகளை வசூலிப்பதற்காக அவர்களுடன் நேடியாக தொடர்புகொள்ளுமாறு கோட்ட ஆயத்துறை அலுவலருக்கு/ கோட்டாட்சியருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(2) நிலுவையாக உள்ள வழக்குகளைப் பொறுத்தவரையில் சென்னை உயர்நீதிமன்றத்திற்குச் சென்று, அரசு உரிமையியல் வழக்குரைஞரைப் பார்க்குமாறு கோட்ட ஆயத்துறை அலுவலர்களுக்கு உத்திரவிடப்பட்டுள்ளது. வழக்குகளின் தற்போதைய நிலைமையை அவர்கள் உறுதியாக அறிந்துகொண்டு நீதிமன்றம் தடையாணை ஏதேனும் பிறப்பித்திருப்பின், அதனை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்போதுதான் வசூல்பணியை உடனடியாகத் தொடங்க இயலும்.

*குழுவின் கருத்துரைகள்*

*(7)*

நிலுவைத் தொகையின் நிலை குறித்து பின்வரும் தொடர் நடவடிக்கையில் இருப்பதால், இப்பத்தி தீர்க்கப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

(3) ஆயத்தீர்வை பாக்கிகளின் அன்றாட வசூல் தொடர்பாக மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையாளரின் அலுவலகத்திற்கு நிகரி மூலம் அன்றாடம் அறிக்கை அனுப்புமாறு மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

4) ஒவ்வொரு மாதமும் நிலுவைத் தொகையில் 2% வசூலை எய்துமாறு மாவட்ட ஆட்சியர்களுக்கு உத்தரவிடப்பட்டது.

5) ஆயத்தீர்வையைச் செலுத்தத்தவறிய சாராய –கள் கடைகளின் முன்னாள் உரிமதாரர்களிடமிருந்து பெரும் ஆயத்தீர்வை பாக்கியை வசூலிப்பதில் கோட்டாட்சியர்கள் வட்டாட்சியர்கள், பிர்கா வருவாய் ஆய்வாளர்களையும் ஈடுபடுத்துமாறு மாவட்ட ஆட்சியர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

6) ஆயத்தீர்வை பாக்கித் தொகைகளை வசூலிக்கத் தவறிய அல்லது மிகக்குறைவாக வசூல் கணக்குகைக் காட்டிய அதிகாரிகள் மீது குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யுமாறு, அவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றி தவறாமல் அவ்வப்போது மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையாளர் அலுவலகத்திற்குத் தெரிவிக்குமாறும் மாவட்ட ஆட்சியர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

7) மாதந்தோறும் நடைபெறும் மாவட்ட வருவாய் நிருவாக ஆய்வுக்கூட்டத்தில் ஆயத்தீர்வை பாக்கி வசூலில் ஏற்பட்ட முன்னேற்றம் பற்றி ஆய்வு செய்யுமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

ஆயத்தீர்வை பாக்கிகளை வசூலிக்க தேவையான செம்மையான நடவடிக்கைகள் ஏற்கெனவே எடுக்கப்பட்டுள்ளதால், இக்கருத்துரைகள் குறித்து முடிவு செய்யப்பட்டதாகக் கருதுமாறு குழு கேட்டுக்கொள்ளபடலாம்.

(26–4–2006–ஆம் நாளிட்ட உள் துறையின் அ.க.கு எண் 19790/gen/ 2006–1–ல் பதில்கள் பெறப்பட்டன.)

| Serial No. | Recommendation No. | Paragraph No. | Subject. | Comments of the Committees . |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 8 | 20 | 15.3 | Outstanding Inspection Reports and audit objections | The Committee desires to impress on all concerned that the audit objections pointed out in loss of revenue should be settled immediately as otherwise making good the loss will become difficult and even impossible due to efflux of time and non-availability of the persons or firms from whom these are due. The Committee desires to have a report on the settlement objections pending over one year within three months. |

| Reply from the Department | Further Comments of the committee |
|---|---|
| (6) | (7) |
| The Finance (Audit ) Department had issued necessary instructions in D.O.letter No.57840/Audit /2008-1 dt. 22-9-2008, D.O. Letter No.57840/Audit/ 2008-6 dt.30-4-2009 and letter No.62065/Audit/2010. date:26.10.2010 to the concerned Secretaries to Government to take immediate action to settle all the pending inspection reports without any further delay. In this connection, the Government has constituted a State Level Audit and Accounts Committee at the Government level and Departmental Audit and Accounts Committee in each administrative department in G.O. Ms No.166, Finance (Audit) Department dated 5.3.1993 to review and facilitate speedy settlement of audit paras on pending inspection reports, draft paragraph, Action Taken Report, etc. In G.O. Ms.No. 333, Finance (Audit) Department dated 5.9.2001, Government has also ordered to constitute a monitoring committee in each administrative department under the chairmanship of the concerned Secretaries to Government and an Apex Committee under the chairmanship of Chief Secretary for reviewing timely furnishing of explanatory notes to Public Accounts Committee. | Treated as settled. |

*Reply from the Department—cont*

*(6)*

In this regard, this department is organizing a meeting every year during the month of November and a Monitoring Committee Meeting on a quarterly basis with the high officials of Accountant General to review the pendency of Inspection Reports, draft paragraph etc. The last audit review meeting was held on 26-10-2010 under the chairperson of Chief Secretary to expedite the settlement of all pendency. In the meeting, the Concerned Secretaries to Government and the respective HOD's have been directed to clear the pendency immediately. Regular follow-up meetings are being taken by Department Secretaries to ensure quick action on pending paras. Hence there has been on failure on the part of the Senior Officials to enforce accountability and protect the interest of the Government. Hence the audit para/objection may be dropped.

(Reply Received from Finance Department vide U.O. Note 46482/Audit 2011, dated 16-9-2011.)

| | |
|---|---|
| | *(5)* |
| | வருவாய் இழப்பை சுட்டிக்காட்டிய தணிக்கை மறுப்புரைகள் விரைவில் தீர்க்கப்பட வேண்டும் என்றும் இல்லாவிட்டால், காலப்போக்கில் நிலுவைத் தொகை வரவேண்டிய நபர்கள் அல்லது நிறுவனங்கள் இல்லாமல் போனால் இழப்பை வசூலிப்பது கடினமாகும் இன்னும் முடியாமலும் போகும் என்று சம்பந்தப்பட்ட அனைவரையும் குழு வலியுறுத்திக் கூறியது. ஓராண்டுக்கு மேல் நிலுவையாக உள்ள அனைத்து மறுப்புரைகளின் தீர்வு குறித்த அறிக்கையை மூன்று மாத காலத்திற்குள் அனுப்பவேண்டும் என இக்குழு விரும்புகிறது. |
| *துறையின் பதில்* | *குழுவின் கருத்துரைகள்* |
| *(6)* | *(7)* |
| நிதித் (தணிக்கை) துறையின் நேர்முக கடித எண். 57840/ தணிக்கை/ 2008–1 நாள் 22–9–2008, நேர்முகக் கடித எண். 57840–1/ தணிக்கை/ 2008–6, நாள்: 30–04–2009 மற்றும் கடித எண். 62065/ தணிக்கை/2010, நாள்: 26–10–2010 மூலம் சம்பந்தப்பட்ட துறையின் செயலாளர்கள் காலதாமதம் ஏற்படுத்தாமல் நிலுவையாக உள்ள ஆய்வு அறிக்கைளை உடனடியாக தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும்படி அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மேலும் இது தொடர்பாக அரசு மாநில அளவில் மாநில தணிக்கை மற்றும் கணக்குகள் குழுவும், ஒவ்வொரு நிர்வாகத் துறையின் கீழ் நிர்வாகத் தணிக்கை மற்றும் கணக்குகள் குழுவும் அரசாணை எண்.166, நிதித் (தணிக்கை) துறை, நாள் 5.3.1993 மூலம் ஏற்படுத்தி நிலுவையிலுள்ள ஆய்வு அறிக்கைகள் மீதான தணிக்கைப்பத்திகள், வரைவுப் பத்திகள், நடவடிக்கை எடுக்கப்பட்டதற்கான அறிக்கை ஆகியவற்றை உடனடியாக ஆய்வு செய்து விரைவில் தீர்வு செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், நிதித் (தணிக்கை) துறையின் 5.9.2001 ஆம் நாளிட்ட 333–ஆம் எண் அரசாணையின் மூலம் ஒவ்வொரு நிர்வாகத் துறையிலுள்ள செயலாளர்கள் தலைமையின் கீழ் கண்காணிப்புக் குழு ஒன்றையும் தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் உயர்மட்ட குழு ஒன்றையும் ஏற்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது. இக்குழு குறுகிய காலத்தில் தணிக்கைப் பத்திகளை ஆய்வு செய்து பொதுக் கணக்குக் குழுவுக்கு விளக்கக் குறிப்புகளை அளிக்கின்றது. மேலும் இது தொடர்பாக இத்துறை நிலுவையாக உள்ள முதலியவற்றை ஆய்வு செய்து தீர்வு | தீர்க்கப்பெற்றதாகக் கருதப்படுகிறது. |

(6)

செய்வதற்காக ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதத்தில் உயர்மட்டக் குழுக் கூட்டத்தைக் கூட்டுவதுடன் காலாண்டு அடிப்படையில் கண்காணிப்புக் குழுக் கூட்டத்தையும் மாநிலக் கணக்காயர் உயர் அலுவலர்களுடன் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்கிறது. நிலுவைகளை உடனடியாக தீர்வு செய்வதற்காக தணிக்கை ஆய்வு கூட்டம் கடைசியாக 26.10.2010 அன்று தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நிலுவைகளை உடனடியாக தீர்வு செய்யும்படி அந்தந்த துறை செயலாளர்களும் துறைத் தலைவர்களும் வலியுறுத்தப்பட்டனர். நிலுவையாக உள்ள பத்திகள் குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக கூட்டங்கள் துறைச் செயலாளர்களின் மூலமாக முறையாக நடத்தப்பட்டு வருகிறது. ஆகவே அரசின் குறிக்கோளை பாதுகாப்பதிலும் கணக்கு வைப்பு முறையை பராமரிப்பதிலும் முதுநிலை அதிகாரிகள் எவரும் தங்கள் கடமையிலிருந்து தவறியிருக்கவில்லை. எனவே இந்த தணிக்கைப் பத்தி மறுப்புரை கைவிடலாம்.

(16–9–2011–ஆம் நாளிட்ட நிதித்துறையின் அசாகு. எண். 46482/Audit/2011–ன் மூலம் பதில் பெறப்பட்டது.)

## APPENDIX - II

### STATEMENT SHOWING THE OBSERVATIONS / RECOMMENDATIONS WHICH THE COMMITTEE HAS DESIRED TO PURSUE

### HOME, PROHIBITION AND EXCISE DEPARTMENT

| *Serial No.* | *Recommendation No.* | *Paragraph No.* | *Subject.* | *Committee 's observations/ recommendations* |
|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* |
| 1 | 10 | 8.4 | Non Collection of additional fees on autorickshaws | The Committee is not happy with the incorrect reply furnished by the Department to the Committee in the Explanatory notes.<br>The Committee would like to be informed of the total amount due to be recovered and action taken to ensure early recovery. |

| *Reply from the Department* | *Comments of the Committees* |
|---|---|
| *(6)* | *(7)* |
| The Regional Trasnport Officer, Madras (South) was strictly instructed to collect the amount pointed out by the Accountant General. The amount to be collected in this regard is Rs.20,700. Out of this a sum of Rs.575 has been collected by the R.T.O. Madras (South). The balance will be collected shortly. | The Committee would like to have a further report with in three months about the progress made in collection of dues in this regard. |

| *Fruhter Reply from the Department* | *Further Comments of the committee* |
|---|---|
| *(8)* | *(9)* |
| Out of the total sum of Rs.20700/- Rs.575/- was already collected. Again a sum of Rs.1500/- was collected. by Regional Transport officer, Chennai (south), Chennai-41. The balance sum of Rs.18625/- will be collected shortly strict instructions were issued by the Transport commissioner to Regional Transport officer (s) for speed up the collection of balance amount. | The Committee would like to know the latest position regarding collection of balance amount of Rs.18.625/- |

குழுவின் குறிப்புரைகளும், பரிந்துரைகளும்

(5)

துறை, குழுவிற்கு அனுப்பியிருந்த விளக்கக் குறிப்பில் தவறான தகவலை அளித்திருப்பது குழுவிற்கு வேதனை அளிக்கிறது.

வசூலிக்கப்பட வேண்டிய மொத்தத் தொகையைக் குறித்தும் அதனை விரைந்து வசூலிக்க நடவடிக்கை எடுத்தது பற்றியும் குழு அறிய விரும்புகிறது.

துறையின் பதில்

(6)

மாநில கணக்குத் துறைத் தலைவர் சுட்டிக்காட்டிய தொகையை வசூலிக்கும்படி சென்னை வட்டாரப் போக்குவரத்து அதிகாரிக்கு (தெற்கு) கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இது தொடர்பாக வசூலிக்கப்பட வேண்டிய தொகை ரூ.20,700 ரூபாயாகும். இத்தொகையில் 575 ரூபாயை சென்னை வட்டாரப்போக்குவரத்து அதிகாரி (தெற்கு) வசூலித்துள்ளார். எஞ்சியுள்ள தொகை விரைவில் வசூலிக்கப்படும்.

குழுவின் குறிப்புரைகள்/பரிந்துரைகள்

(7)

இது தொடர்பான பாக்கித் தொகைகளை வசூலிப்பதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து மூன்று மாதங்களுக்குள் மேற்கொண்டும் அறிக்கையைப் பெற குழு விரும்புகிறது.

மேலும் துறையின் பதில்

(8)

மொத்தத் தொகை ரூ.20,700–ல் ரூ.575/–ஏற்கெனவே வசூலிக்கப்பட்டது. சென்னை.41 சென்னை (தெற்கு) வட்டாரப் போக்குவரத்து அதிகாரி மேற்கொண்டும் ரூ. 1500/– வசூலித்தார் எஞ்சியுள்ள தொகையான ரூபாய் 18,625/–விரைவில் வசூலிக்கப்படும் மீதமுள்ள தொகையை விரைந்து வசூலிப்பதற்காக சென்னை (தெற்கு) வட்டாரப் போக்குவரத்து அதிகாரிக்கு போக்குவரத்து ஆணையாளர் கண்டிப்பான உத்திரவுகள் பிறப்பித்துள்ளார்.

மேலும் குழுவின் கருத்துரைகள்

(9)

மீதமுள்ளத் தொகையான ரூ.18,625/ஐ வசூலிப்பது தொடர்பான அண்மை நிலவரம் குறித்து அறிய குழு விரும்புகிறது.

| Serial No. | Recommendation No. | Paragraph No. | Subject. | Committee 's observations/ recommendations |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 2 | 4 | 12.5 | Non-recovery of government dues from defaulters | The Committee notes shat these cases are pending for more than 10 years without adequate action. The committee desires to be informed of the amount due in these cases. The Committee also recommends suitable disciplinary action against the officials responsible or this lapse.<br><br>The Committee observes that the arrears relare to a back period of 12 to 15 years. The committee recommends that (i) Special and effective measures should be evolved at least now, and followed up diligently to collect the dues or to write off the amount wherever it has become irrecoverable. |

| Reply from the Department | Comments of the Committees |
|---|---|
| (6) | (7) |
| I.A .S No28/83-84 uppliya puram village of Thuraiyur Taluk.<br><br>The A.S. No.28/83-84 was auctioned on 2nd June 1983. The sale was knocked down by Thiru A. Andi for Rs.27,600p.m. Since he failed to pay 1/2 a amount kisyt, the shop was brought to resale on 30th June 1983 in which Thiru. R. Chandrasekaran of Maruvpthur village bid the shop for Rs.23,000, Due to resale the Government sustained a loss of revenue of Rs.64,100. The Collector of Trichy District has issued recovery orders in his Proc. No. Pand E No. 70613/85, dated 3rd August 1988 and notice was issued to Thiru Andi on 5th November 1988 to remit the above loss. As he has not responded to the notice his landed properties were attached and brought for sale on 30th March 1989 Aggrieved by this Thiru. A. Andi filed a suit in O.S. o. 392/91 and IA 184/98 in the District Munisiff Court Thuraiyur against the Collector. Trichy. He has withdrawn the suit on 26th March 1992 and has filed a w.p. 703 93 in the High Court to Madras. The draft counter affdavit has been approved and sent to Government Pleder for filing before the Court in Government Lr.Ms.No.1/2 dated 14th May 1996, the stage of the case is awaited. | The Committee observes that the arrears related to a back period of 12 to 15 years. The committee recommends that (i) special and effective measures should be evolved at least now and followed up diligently to collect the dues or to write off the amount wherever it has become irrecoverable.<br><br>(ii) the stage at which the matter stands at present may also be communicated to the committee. |

2. A.S. No.29-83-84 Shobanapuram Village of Thuyaiyur Taluk.

The A.S.No. 29/83-84 of Uppluyapuram village was auctioned on 2nd June 1983. Thiru. V. Appasamy was the successful bidder for a Monthly rental of Rs.11,300. Since he has failed to remit 1/2 a month kist, the shop was brought to resale on 9th June 1983 in which Thiru Subramanian of Sobanapuram village bid the shop for Rs.6,700. As the amount fetched in resale was below the Original bid, it was again resold and it fetched a monthly rental of Rs.10,000 by Thiru pappu Rediyar of Sobanapuram village. Due to resale, there was a loss of revenue of Rs.21,567.50 to Government. The Collector, Trichy district has issued recovery orders in his pro. P&E 1/70613/85, dated 3rd August 1988, and a notice has been issued to him on 3rd November 1988 to remit the above loss. As he has not responded his landed properties were attached and brought to sale on 30th March 1989. Thiru Appasamy filed a suit in O.S. No391/95 . I.A. No. 1838/91 in District Munisiff Court, Thuraiyur against the Collector, Trichy district. Thiru Appasamy subsequently withdrawn his suit on 26th March 1992. He filed W.P. No,. 7054/93 in the High Court of Madras. The draft counter Affidavit in the above case has been approved and sent to Government Pleader for filing before Court in the Government Lr. Ms. No. 112, Pand H dated 14th May 1996 the stage of the case is awaited.

3. A.S.No 30/83-84 Koppampatti of Thuraiyur taluk.

The A.S.No.30/83-84 of Koppampatti village of Thuraiyur taluk was auctioned on 2nd June 1983. Thiru N. Natarajan, son of Nallappa Reddy of uppliya puram village was the successful bidder for a monthly rental of Rs.20,100. Since he has not remitted 1/2 a months kist the closure of Auction day the shop was brought to resale on 30th June 1983. In the resale the shop fetched a monthly rental of Rs.15,700 due to resale. there was a notional loss of Rs.58,624.20. The recovery order was passed by the Collector, Trichy district in his Pro.P and E1/ 70713/85 dated 3rd August 1988 and a notice has been issued by the Excise Officer, Musiri to him under Revenue Recovery Act in Letter

No.96/88 dated 10th November 1988. Aggrieved by this he filed a O.P/ No.12/89 in J.A. 226/9 in sub Court , Trichy. When the case is pending, he has filed a W.P. No.14656/ 92. The case filed in Sub-Court , Trichy was dismissed on 12th January 1993. In W.P. No. 14656/92 Draft Counter Affidavit has been filed in the High Court of Madras on 23rd November 1992. The stage of the case is awaited.

4. A.S. No. 33/83-84 of Vairichettipalayam, Thuraiyur taluk.

A.S. No.33/83-84 of Vairichettipalayam village of Thuraiyur taluk was sold on 2nd June 1988 and the shop was knocked down by Thiru.P. Muthu, son of Palaniappa Gounder of Murungapatti village, Thuraiyur taluk for a monthly kist of Rs. 19,000. Since he has not paid 1/2 months kist, the shop was brought to resale on 30th June 1983. In the resale, the higheset bidder was Thiru Rengaraj for Rs.14,100 p.m. Due to resale, there was a loss of revenue to Government to the tune of Rs.67,125 Recovery order was passed by the Collector of Trichy district in pro. Pand E1 70612/85, dated 3rd August 1988. A notice has been issued by the Divisional Excise Officer Musiri under revenue recovery Act in his Pro.No 97/98 dated 28th September 1988 to him on 6th January 1988. Aggrieved by this, he has filed O.S. No,. 394/89 in the Sub-Court Trichy and the case was decreed in favour of the petitioner on 17th October 1994. The Government Pleader, Trichy has opined that it is a fit case for second Appeal , Appeal memorandum has been prepared and handed over to the Additional Government pleader, Madras. The Additional Government pleader, Madras has called for the printed copies of judgement. The Government Pleader, Trichy has been addressed by the A.C. (B) to send the printed copies of judgement and they are awaited from the Government Pleader, Trichy.

Regarding taking of disliplinary action against the official responsible, the following excise officials were working in Musiri Divison and they were responsible for not attending to collect the notional loss immediately.

| Name of the Taluk Excise Officers (1) | | Period of Working (2) |
|---|---|---|
| Thiruvalargal | | |
| 1. K.S. Raman | .. | 8/82 to 10/83 |
| 2. K. Pichaikannu | .. | 11/83 to 8/85 |
| Name of the Assistants | | |
| 1. N. Kuppu Rao | .. | 12/82to 2/84 |
| 2. P. Seethapathy | | 2/84to 7/ 85 |
| 3. V. Krishnamoorthy | | 1/83 to 10/84 |
| 4. N. Thiyagarajan | | 10/84to12/85 |
| Name of the Excise Revenue Inspetors | | |
| 1. P. Pichai | .. | 1/83to 2/83 |
| 2. Subbukrishnan | .. | 1/83 went on leave |
| 3. P. Ganesan | .. | 3/83/to 8/83 |
| 4. K. Durasamay | .. | 8/83 to 7/85 |

Disciplinary action on the above said Excise Officials, cannot be taken as they were promoted as Deputy Collectors and retired. Further action is being pursued to collect the details of the remaining excise officials (i.e Assistants and Excise Revenue Inspectors) to take disciplinary action against them

| *Further Reply from the Department* | *Comments of the committee* |
|---|---|
| *(8)* | *(9)* |
| (i) The observations of the committee are noted for future guidance and action. | The Committee desires to know |
| (ii) 1) A.S. No 28/83-84 | 1) Treated as settled. |
| 2) A.S. No. 29/83-89 | 2) The latest position in this regard. |
| The defaulting bidders were required to make good the loss suffered by the Government due to resale. They filed W.P. (W.P. No. 7053/94 and W.P. 7054/94). The High Court has observed on 7.8.01 that the respondents shall have right to forfeit the E.M.D. and they have no right to claim the 1/2 month's kist and the petitioners cannot be made liable for the notional loss. The collector, Truchirapalli has reported that he is taking action to get the opinion of the Government Pleader to pursue further action in this regard. | 3) The outcome of the case. |
| 3) Thiru M. Muthu A.S. No. 33/83-84 | 4) The position of collection of the balance amount of Rs.51,125 |
| Appeal has been filed in the High Court, Chennai. | |
| The case is still pending in the Court. | |
| 4) Thiru N. Natarajan -A.s. No. 30/83-84 Rs. 58,625/- | |
| The writ filed by the party in the High Court, Chennai in W.P. 14656/92 was dismissed on 23.3.93. In O.S. No. 443/92 of Trichy Additional Judicial Court judgement was delivered on 25.10.94 in favour of the Government. The party has agreed to remit the amount. A sum of Rs. 17,500 was remitted so far. Action is being taken to recover the balance amount. | |

*(5)*

போதுமான நடவடிக்கை ஏதும் இல்லாமல், இந்த வழக்குகள் 10 வருடங்களுக்கும் மேலாக நிலுவையில் உள்ளன. என்று குழு சுட்டிக்காட்டுகிறது. இந்த வழக்குகளில் எவ்வளவு தொகை நிலுவையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்ள குழு விரும்புகிறது. இக்காலதாமதத்திற்குப் பொறுப்பான அலுவலர்கள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

*துறையின் பதில்*

*(6)*

1. சா. க. எண். 28/83–84 துறையூர் வட்டம், உப்பிலியாபுரம் கிராமம்.

சா.க.எண். 28/83–84 2–6–1983 ஆம் நாளன்று ஏலத்திற்கு விடப்பட்டது. இதை திரு. ஆண்டி என்பவர் தங்களொன்றுக்கு 27,600 ரூபாய்க்கு ஏலம் எடுத்தார். அவர் இக்கடைக்கு 1/2 மாத கிஸ்தி செலுத்தத் தவறியதால், இக்கடை 30–6–1983 ஆம் நாளன்று மறு விற்பனைக்குக் கொண்டு வரப்பட்டது. அதில் மருவத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஆர். சந்திரசேகரன் 23,000 ரூபாய்கு ஏலம் எடுத்தார். மறு விற்பனை காரணமாக அரசுக்கு 64,100 ரூபாய் இழப்பு ஏற்பட்டது. திருச்சி மாவட்ட ஆட்சியர் அவருடைய 3–8–1988 ஆம் நாளிட்ட ம.வி. ஆ. 70613/1985 ஆம் எண். நடவடிக்கைக் குறிப்பில், தொகையைத் திருப்பி வசூலிக்க ஆணை பிறப்பித்தார். மேற்குறிப்பிட்ட இழப்புத் தொகையைச் செலுத்துமாறு திரு. ஆண்டிக்கு 5–11–1988 ஆம் நாளன்று அறிவிப்பு ஒன்று அனுப்பப்பட்டது. இந்த அறிவிப்புக்கு அவர் பதிலளிக்காததால் அவருடைய நிலங்கள் ஜப்திசெய்யப்பட்டு. 30–3–1989 ஆம் நாளன்று விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன. இதனால், பாதிப்பிற்குள்ளான திரு. ஆண்டி, திருச்சி மாவட்ட ஆட்சியருக்கு எதிராக துறையூர் மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் மு.வ.எண். 392/91 கு.மே. 1841/91 ஆகியவற்றைத் தாக்கல் செய்தார். அவர் 26–3–1992 ஆம் நாளன்று வழக்கைத் திரும்பப்பெறுக் கொண்டு சென்னை உயர்நீதி மன்றத்தில் 7053/93 ஆம் ரிட்மனுவைத் தாக்கல் செய்துள்ளார். அரசு மதுவிலக்கு–ஆயத்துறையின் 14–5–1996 ஆம் நாளிட்ட 112 ஆம் எண். அரசு கடிதத்தில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்காக விரைவு எதிர் உறுதிமொழிப்பத்திரம் தயாரித்து ஒப்புதல் பெற்று அரசு வழக்குரைஞருக்கு அனுப்பப்பட்டுள்ளது. வழக்கு எந்த நிலையில் உள்ளது என்பது குறித்த தகவல் எதிர்பார்க்கப்படுகிறது.

*குழுவின் குறிப்புரைகள்/பரிந்துரைகள்*

*(7)*

இந்த நிலுவைகள் கடந்த 12 முதல் 15 ஆண்டுக்காலத்திற்கானதாகும் என்று குழு அறிகிறது.

(i) நிலுவைகளை வசூலிக்க சிறப்பாகவும் முனைப்பாகவும் வழிவகைகளை மேற்கொள்ள திட்டம் வகுத்து அவற்றை மேற்கொள்ளவேண்டுமெனவும் அல்லது வசூலிக்க இயலாத இடங்களில் அவற்றைக் கணக்கிலிருந்து தள்ளுபடி செய்யவேண்டுமெனவும் குழு பரிந்துரைக்கிறது.

(ii) இந்த பிரச்சினை தற்போது எந்நிலையில் உள்ளது என்பதைக் குழுவிற்குத் தெரிவிக்கவேண்டும்.

**2. சா.க. எண். 29/83–84, துறையூர் வட்டம், சோபனபுரம் கிராமம்.**

உப்பிலியாபுரத்திலுள்ள 29/83–84 ஆம் உஎண். சாராயக்கடை, 2–6–1983 ஆம் நாளன்று ஏலத்திற்கு விடப்பட்டது. திரு. வி. அப்பாசாமி என்பவர் அக்கடையைத் தினங்களொன்றுக்கு 11,300 ரூபாய்க்கு ஏலம் எடுத்தார். அவர் 1/2 தினங்களுக்கான கிஸ்தியை செலுத்தத் தவறியதால் அக்கடை 9–6–1983 ஆம் நாளன்று மறு ஏலத்திற்கு கொண்டுவரப்பட்டது. அச்சமயம் சோபனபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சுப்பிரமணியம் 6,700 ரூபாய்க்கு ஏலம் எடுத்தார். மறு ஏலத்தின் தொகை முதல் ஏலத் தொகையை விட மிகக் குறைவு. எனவே, அக்கடை மீண்டும் மறு ஏலம் விடப்பட்டது. சோபனபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. பாப்பெரெட்டியார் ரூ.10,000 ரூபாய்க்கு ஏலம் எடுத்தார். மறு ஏலம் காரணமாக, அரசுக்கு 21,567.,50 ரூபாய் இழப்பு ஏற்பட்டது. திருச்சி மாவட்ட ஆட்சியர் அவருடைய 3–8–1988 ஆம் நாளிட்ட. ம. ஆ. 1/70613/85 ஆம் எண் நடவடிக்கைக் குறிப்பில் தொகை வசூலிக்க ஆணை பிறப்பித்தார். மேற்குறிப்பிட்ட இழப்புத் தொகையைச் செலுத்துமாறு 3–11–1988 ஆம் நாளன்று அவருக்கு அறிவிப்பு ஒன்று அனுப்பப்பட்டது. அவர் தொகையைச் செலுத்தாததால் அவருடைய சொத்துக்கள் ஜப்தி செய்யப்பட்டு 30–3–1989 அன்று விற்பனைக்குக் கொண்டு வரப்பட்டன. திரு. அப்பாசாமி திருச்சி மாவட்ட ஆட்சியருக்கு எதிராக துறையூர் மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில்அ.வ. எண். 391/95, இ.மே. எண்.1838/91 ஆம் எண். வழக்குகளைத் தாக்கல் செய்தார். அதன் பின்னர் திரு. அப்பாசாமி 26–3–1992 ஆம் நாளன்று வழக்கைத் திரும்பப் பெற்றுக் கொண்டார். அவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் 7054/93 ஆம் எண். ரிட் மனுவைத் தாக்கல் செய்தார். மேற்சொன்ன வழக்கில் வரைவு எதிர் வாக்குமூலம் தயாரிக்கப்பட்டு, ஒப்புதல் பெறப்பட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்காக, அரசு, மதுவிலக்கு ஆயத்துறையின் 14–5–1996–ஆம் நாளிட்ட 112 ஆம் எண். கடிதத்தில் அரசு வழக்குரைஞருக்கு அனுப்பியுள்ளது. வழக்கு எந்த நிலையில் உள்ளது என்பது குறித்த தகவல் எதிர்பார்க்கப்படுகிறது.

**3. சா.க. எண். 30/83–84 துறையூர் வட்டம் கொப்பம்பட்டி.**

துறையூர் வட்டம், கொப்பம்பட்டி கிராமத்திலுள்ள 30/83–84 ஆம் எண். சாராயக்கடை, 2–6–1983 ஆம் நாளன்று ஏலம் விடப்பட்டது. உப்பிலியாபுரம் கிராமத்தைச் சேர்ந்த நல்லப்பரெட்டியின் மகன் திரு. ந. நடராஜன் தினங்களொன்றுக்கு 20,100 ரூபாய்க்கு ஏலம் எடுத்தார். ஏலநாள் முடிவடையும் முன் அவர் 1/2 தினங்கள் கிஸ்தியைச் செலுத்தத் தவறியதால் அக்கடை, 30–6–1983 ஆம் நாளன்று மறு ஏலம் விடப்பட்டது. மறுவிற்பனையில்

இக்கடை 15,700 ரூபாய்க்கு ஏலம் எடுக்கப்பட்டது. மறுவிற்பனை காரணமாக, 58,624.20 ரூபாய் நட்டம் ஏற்பட்டது. திருச்சி மாவட்ட ஆட்சியர், மதுவிலக்கு–ஆயத்தீர்வைத் துறையின் 3–8–1988 ஆம் நாளிட்ட 1/70613/85 ஆம் எண். நடவடிக்கைக் குறிப்பில் தொகையை வசூலிக்க ஆணை பிறப்பித்தார். முசிறியைச் சேர்ந்த ஆயத்தீர்வை அதிகாரி 10–11–1988 ஆம் நாளிட்ட 96/88 ஆம் எண். கடிதத்தில் வரி வசூல் சட்டத்தின் கீழ் அறிவிப்பு ஒன்றை அவருக்கு அனுப்பினார். இதனால் பாதிக்கப்பட்டவர் திருச்சி துணை நீதிமன்றத்தில் அ.வ. 12/89, மு.ம. 226/89 ஆம் எண் வழக்குகளைத் தொடர்ந்தார்.

வழக்கு நிலுவையாயிருந்தபோது, 14656/92 ஆம் எண் ரிட் மனு ஒன்றைத் தாக்கல் செய்தார். திருச்சி துணை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கு 12–1–1993 ஆம் நாளன்று தள்ளுபடி செய்யப்பட்டது. 14650/92 ஆம் எண் ரிட் மனுவில் 23–11–1992–ஆம் நாளன்று சென்னை உயர்நீதி மன்றத்தில் வரைவு எதிர் உறுதிமொழிப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு எந்நிலையில் உள்ளது என்பது குறித்த தகவல் எதிர்பார்க்கப்படுகிறது.

4. சா.க. எண். 33/83–84 வைரிசெட்டிபாளையம், துறையூர் வட்டம்

துறையூர் வட்டம், வைரிசெட்டி பாளையத்திலுள்ள 33–83/84 ஆம் எண். சாக. 2–6–1988 ஆம் நாளன்று ஏலம் விடப்பட்டது. அதனை துறையூர் வட்டம், முருங்கப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த பழனியப்பகவுண்டரின் மகன் திரு. ப. முத்து 19,000 ரூபாய்க்கு ஏலம் எடுத்தார். அவர் 1/2 தங்கள் கிஸ்தியை செலுத்தாத காரணத்தால், அக்கடை 30–6–1983–ஆம் நாளன்று மறு ஏலம் விடப்பட்டது. இம் மறு விற்பனையில், கோரிய திரு. ரெங்கராஜ் தங்களொன்றுக்கு 14,100 ரூபாய்க்கு ஏலம் எடுத்தார். இம்மறுவிற்பனை காரணமாக, அரசுக்கு 67,125 ரூபாய் வரை இழப்பு ஏற்பட்டது. திருச்சி மாவட்ட ஆட்சியர் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையின் 3–8–1988 ஆம் நாளிட்ட 1/70612– 88 ஆம் எண் நடவடிக்கைக் குறிப்பில் தொகை வசூலிக்க ஆணை பிறப்பித்தார். முசிறி, கோட்ட ஆயத்தீர்வை அதிகாரி அவருக்கு 6–7–1988 ஆம் நாளன்று, வரி வசூல் சட்டத்தின்கீழ் அவருடைய 97–88 ஆம் நடவடிக்கைக் குறிப்பில் அறிவிப்பு ஒன்றை அனுப்பினார். இதனால் பாதிக்கப்பட்டவர் திருச்சி துணை நீதிமன்றத்தில் 394/89 ஆம் எண். அ.வ. ஒன்றைத் தாக்கல் செய்தார். மனுதாருக்கு ஆதரவாக 17–10–1994 ஆம் நாளன்று அவ்வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டது. திருச்சி அரசு வழக்குரைஞர் இவ்வழக்கு இரண்டாம் மேல்முறையீட்டிற்கு ஏற்ற வழக்கு எனக் கருத்துத் தெரிவித்தார். மேல்முறையீட்டு குறிப்பினை தாயாரிக்கப்பட்டு சென்னை அரசு கூடுதல் வழக்குரைஞரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சென்னை அரசு கூடுதல்

வழக்குரைஞர் தீர்ப்பின் அச்சு நகலைக் கேட்டிருந்தார். உதவி ஆணையர் (ஆயம்) தீர்ப்பின் அச்சிட்ட நகலை அனுப்புமாறு திருச்சி, அரசு வழக்குரைஞரைக் கேட்டிருந்தார். திருச்சி அரசு வழக்குரைஞரிடமிருந்து நகல் எதிர்பாக்கப்படுகின்றது.

இதற்கு பொறுப்பான அதிகாரி மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதைப் பொறுத்தமட்டில் முசிறிகோட்டத்தில் பின்வரும் ஆயத்துறை அலுவலர்கள் பணியாற்றி வந்தனர். கருத்தளவிலான இழப்புத் தொகையை உடனடியாக வகுலிக்காததற்கு இந்த ஆயத்துறை அதிகாரிகளே பொறுப்பாவர்.

| வட்ட ஆயத்துறை அதிகாரியின் பெயர் | பணியாற்றிய கால அளவு. |
|---|---|
| திருவாளர்கள் | |
| 1. கே. எஸ், இராமன் | 8/82 முதல் 10/83 வரை |
| 2. கே. பிச்சைகண்ணு | 11/83 முதல் 8/85 வரை |

| உதவியாளர்களின் பெயர் | பணியாற்றிய கால அளவு |
|---|---|
| 1. எஸ். குப்புராவ் | 12/82 முதல் 2/84 வரை |
| 2. பி. சீத்தாபதி | 2/84 முதல் 7/85 வரை |
| 3. வி. கிருஷ்ணமூர்த்தி | 1/83 முதல் 10/84 வரை |
| 4. என். தியாகராஜன் | 10/84 முதல் 12/85 வரை |

| ஆயத்தீர்வை வருவாய் ஆய்வாளர்களின் பெயர் | பணியாற்றிய கால அளவு |
|---|---|
| 1. பி. பிச்சை | 1/83 முதல் 2/83 வரை |
| 2. சுப்பி கிருஷ்ணன் | 1/83 விடுப்பில் சென்றுவிட்டார் |
| 3. பி. கணேசன் | 3/83 முதல் 8/83 வரை |
| 4. கே. துரைசாமி | 8/83 முதல் 7/85 வரை |

மேற்குறிப்பிட்ட ஆயத்தீர்வை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க இயலவில்லை. ஏனெனில் அவர்கள் துணை ஆட்சியராக பதவி உயர்வு பெற்று ஓய்வு பெற்றுவிட்டனர். எஞ்சியுள்ள ஆயத்தீர்வை அலுவலர்கள் பற்றிய விவரங்களைச் சேகரிக்கவும் (அதாவது உதவியாளர்கள் ஆயத்தீர்வை வருவாய் ஆய்வாளர்கள்) அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(i) குழுவின் கருத்துக்கள் மேற்கொண்டும் கடைப்பிடிப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதற்கும் கவனத்தில் கொள்ளப்பட்டன.

(ii) சா.க.எண்.28/83–84

சா.க.எண் 29/83–84

மறு விற்பனை காரணமாக அரசுக்கு ஏற்பட்ட இழப்பைச் சரி செய்யுமாறு, தொகை செலுத்தத் தவறிய ஏலதாரர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர். அவர்கள் ரிட் மனுக்களை (ரிட் மனு எண்.7053/94.ரிட் மனு 7054/94) தாக்கல் செய்தனர். பிணைவைப்புத்தொகையைப் (EMD) பறிமுதல் செய்ய எதிர்மனுதாரர்களுக்கு உரிமை உண்டு என்றும் 1/2 மாத கிஸ்தியைக் கோர அவர்களுக்கு உரிமை இல்லை என்றும், கருத்திபல் இழப்புக்கு மனுதாரர்களைப் பொறுப்பாக்க முடியாது என்றும், உயர்நீதிமன்றம் 7.8.2001 அன்று தீர்ப்பளித்தது. இது தொடர்பாக மேற்கொண்டும் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, அரசு உரிமையியல் வழக்குரைஞரின் கருத்தைப் பெறுவதற்காக நடவடிக்கை எடுத்துவருவதாக திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

(3) திரு எம் முத்து (சா.க. எண் 33/83–84)

சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு உயர்நீதிமன்றத்தில் இன்னும் முடிவுறாமல் உள்ளது.

(4) திரு என். நடராஜன், (சா.க எண்.30/83–84) ரூ58,625/–)

சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு எண். 14656/92 –ல் சம்பந்தப்பட்ட தரப்பினர் தாக்கல் செய்த ரிட் மனு 23–3–93 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. திருச்சி கூடுதல் நீதிதுறை நீதிமன்றத்தின் 443/92–ஆம் எண் முதல் வழக்கில் 25.10.94 அன்று அரசுக்கு ஆதரவாக தீர்ப்பளிக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட தரப்பினர் தொகையைச் செலுத்த ஒப்புக்கொண்டுள்ளனர். இதுவரை ரூ.17,500/– செலுத்தப்பட்டுள்ளது. எஞ்சிய தொகையையும் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



1) தீர்க்கப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

2) இதன் தற்போதைய நிலை குறித்து குழு அறிய விரும்புகிறது.

3) வழக்கின் தீர்ப்பு குறித்து குழு அறிய விரும்புகிறது.

4) நிலுவைத் தொகை ரூ.51,125/–ஐ வசூல் நிலை குறித்து குழு அறிய விரும்புகிறது.

| Serial No. | Recommendation No. | Paragraph No. | Subject. | Comments of the Committees |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 3 | 17 | 12.17 | Non-recovery of Government dues from defaulters. | The Committee notes that the due relates to 1982 (i.e.10 years back) and recommends effective action to get the stay vacated and recover the amount from the defaulters. The Committee would also like to be informed of the final action taken on the officials responsible for this. |

*Reply from the Department*

*(6)*

(i) A.S. No.32/82-83, pollachi Taluk.

In order to Collect the notional loss amounting to Rs.1,50,265.75 under the Revenue Recovery Act from the ex-licensee thru M.V, Unni, Form III was sent to the Collector of Thirusur on 17th February 1993 . It has since been ascertained that the ex-licensee expired. Action is however being taken by the Tahisildar, Mukundapuram, Kerala under Revenue Recovery Act to recover the notional loss. The Collector of Thirussur district is being remainded by the Commissioner of prohibition and Excise periodically on the recovery of the notional loss.

(ii) A.S. No. 28/82-83, Pollachi Taluk.

The defaulter has filed a W.P No. 7925/85 and has obtained stay of the recovery proceedings from High Court on 21st July 1992. The Government Pleader has been asked by the A.C. concerned to get the stay vacated. The Divisional Excise Officer, Pollachi has been instructed to contact Government Pleader, High Court in this regard. Action is being taken by the Commissioner of Prohibition and Excise to get the stay vacated and also to get the Writ petition disposed of expeditiously in order to facilitate the recovery of the notional loss. Thus the recovery of the amount is held up as the matter is sub-judice. Thiruvalargal Herric C. Samuel and A. Kandasamy were working as Taluk Excise Officer, Pollachi from 16th July 1981 to 21st November 1982 and 22nd November 1982 to 8th Aprill 983 respectively. They retired from service on superannuation on 28th February 1987 and 31st May 1986 respectively. As per Tamil Nadu Government Servants (CCA) Rules, 1973 desciplinary action could not be taken against the retired persons who retired 4 years back.

*Comments of the Committee*

*(7)*

The Committee is unable to agree with the departments contention that the loss to Govt. in this case is only notional and not real. The committee finds that the Act does not deem a notional loss but requires that the loss be made good by recovery. The recovery in this case has been pending for more than 15 years. The committee is unhappy to note that the department had failed to take timely action even though the persons responsible for this loss contributed to heavy arrears and granted licences without proper verifications of the solvency of the intending licensees at the time of auction.

| *Further Reply from the Department* | *Comments of the committee* |
|---|---|
| *(8)* | *(9)* |
| As per Tamil Nadu Govt. Servants (CCA) Rules, 1973, Disciplinary action could not be taken against the retired person who retired 4 years back. However, necessary follow up action is being watched in C.P.E's Ref. No. P&E 10 (4) 5155/2004 regarding the recovery of excise arrears from the defaulters, the committee may be requested to drop this objection. | The Committee desires effective action to collect the excise arrears of Rs.1.50 lakh which relates to 1982 and pending for a long time. |

(Replies Received From Home, Department vide U.O. Note 19790/genl/ 2006-1, dated 26-4-2006)

(5)

இந்த நிலுவைத் தொகை 1982 ஆம் ஆண்டு (அதாவது 10 வருடங்களுக்கு முன்பு) சம்பந்தப்பட்டதாகும் என்று தெரிவிப்பதுடன் தடுப்பு ஆணையைத் தள்ளுபடி செய்ய நடவடிக்கை எடுக்கும்படியும் செலுத்தத் தவறியவர்களிடமிருந்து தொகையை வசூல் செய்யுமாறும் பரிந்துரை செய்கிறது. இதற்குப் பொறுப்பான அலுவலர்கள் மீது எடுக்கப்பட்ட இறுதி நடவடிக்கையை குழுவிற்குத் தெரியப்படுத்த வேண்டும் என்று விரும்புகிறது.

துறையின் பதில்

(6)

(i) சா. க. எண். 32/83–பொள்ளாச்சி வட்டம்.

வரி வசூல் சட்டத்தின்கீழ், முன்னாள் உரிமதாரர் திரு. எம்.வி. உன்னியிடமிருந்து கருத்தளவு இழப்புத் தொகையான ரூ.1,50,265.75 தொகையை வசூலிக்கும்பொருட்டு, 17–2–1993 அன்று திருச்சூர் மாவட்டாட்சியருக்கு படிவம்–3 அனுப்பிவைக்கப்பட்டது. இப்படிவத்தை 4–3–1993 அன்று அவர் பெற்றுள்ளார். முன்னாள் உரிமதாரர் இறந்துவிட்டர் என்று அறியப்படுகிறது. வரி வசூல் சட்டத்தின்கீழ். கேரளம், முகுந்தபுரம் வட்டாட்சியர் கருத்தளவு இழப்புத் தொகையை வசூலிப்பதற்குரிய நடவடிக்கையை எடுத்து வருகிறார். கருத்தளவு இழப்புத் தொகையை வசூலிப்பது குறித்து, குறிப்பிட்ட கால அளவிற்கொருமுறை, மது விலக்கு– ஆயத்தீர்வை துறை ஆணையாளர், திருச்சூர் மாவட்டாட்சியருக்கு நினைவூட்டுக் கடிதங்களை அனுப்பி வருகிறார்.

(ii) சா.க.எண். 28 (82–83) பொள்ளாச்சி வட்டம்.

தொகை செலுத்தத் தவறியவர், 7925/85 ஆம் எண் ரிட் மனு தாக்கல் செய்து 21–7–1992 அன்று, வசூல் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்குமாறு, உயர் நீதி மன்றத்திடமிருந்து தடை ஆணை பெற்றுள்ளார். தடை ஆணையை நீக்கும்படி ஆணைகளைப் பெறுமாறு, சம்பந்தப்பட்ட உதவி ஆணையாளர் அரசு வழக்குரைஞரைக் கேட்டுக் கொண்டுள்ளார். இது தொடர்பாக, உயர்நீதிமன்ற அரசு வழக்குரைஞரைத் தொடர்பு கொள்ளுமாறு, பொள்ளாளச்சி கோட்ட ஆயத்துறை அலுவலருக்கு கட்டளையிடப்பட்டுள்ளது. கருத்தளவு இழப்புத் தொகையை வசூலிக்க ஏதுவாக, தடை ஆணையை ரத்து செய்யவும், ரிட் மனு தொடர்பான வழக்கை விரைவில் முடிக்கவும் மதுவிலக்கு–ஆயத்

குழுவின் குறிப்புரைகள்/பரிந்துரைகள்

(7)

இந்த இனத்தில் அரசுக்கு ஏற்பட இழப்பு கருத்தளவிலானதே உண்மையானதல்ல என்ற துறையின் கருத்தை குழுவால் ஏற்க இயலவில்லை. சட்டம் இதனைக் கருத்தளவிலான இழப்பு என்று கருதவில்லை என்றும் ஆனால் இதனை வசூலித்து இந்த இழப்பைச் சரி செய்ய வேண்டுமெனக் கூறுகிறது என்றும் குழு கருதுகிறது. இந்த இனத்தில் இத்தொகை 15 ஆண்டுகளுக்கு மேலாக வசூலிக்கப்படாமல் நிலுவையாக உள்ளது. இந்த இழப்பு ஏற்படுவதற்கு வழி வகுத்து அப்போது பொறுப்பிலிருந்தவர்கள் ஏலத்தின் போது ஏலம் எடுக்க விரும்பிய உரிமதாரர்களின் சொத்து நிலையை முறையாகச் சரிபார்க்காமல் உரிமம் வழங்கி, அதிக நிலுவை சேர்ந்துவிடக் காரணமாயிருந்து விட்டனர் என்ற போதிலும் கூட துறை உரிய நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டது என்பதை அறிந்து குழு வருந்துகிறது.

*(6)*

தீர்வைத் துறை ஆணையாளர் நடவடிக்கை எடுத்து வருகிறார். இவ்வாறாக, இது தொடர்பான வழக்கு விசாரணையில் இருப்பதால் தொகை வசூலிப்பு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது, திருவாளர்கள் ஹெரிக்சி.சாமுவேல் ஏ. கந்தசாமி ஆகியோர் முறையே 16.7.1981 முதல் 21–11–1982 வரையிலும், 22–11–1982 முதல் 8–4–1983 வரையிலும், பொள்ளாச்சி வட்ட ஆயத்துறை அலுவலர்களாகப் பணியாற்றினார்கள். வயது முதிர்வு காரணமாக அவர்கள் முறையே 28–2–1987–ஆம், 31–5–1986 ஆம் நாட்களன்று பணியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டனர். தமிழ்நாடு 1993 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர்கள் (வகைப்பாடு, கட்டுப்பாடு) முறையீடு விதிகளின்படி, 4 ஆண்டுகளுக்கு முன்னர் பணியிலிருந்து ஓய்வு பெற்ற நபர்களுக்கெதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்க இயலாது.

*மேலும் துறையின் பதில்*

*(3)*

தமிழ்நாடு 1973–ஆம் ஆண்டு அரசுப்பணியாளர் (வகைப்பாடு, கட்டுப்பாடு மேல்முறையீடு) விதிகளின்படி, நான்காண்டுகளுக்கு முன்பு ஓய்வு பெற்றவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க இயலாது. இருப்பினும் ஆயத்தீர்வை செலுத்தத் தவறியவர்களிடமிருந்து பாக்கிகளை வசூலிப்பது தொடர்பாக மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையாளரின் குறிப்பு எண். ம.வி. ஆ. 10(4) 5155/2004–ல் தேவையான தொடர் நடவடிக்கையை மேற்கொண்டுவருவது கண்காணிக்கப்பட்டு வருவதால் இம்மறுப்புரையைக் கைவிடுமாறு குழு கேட்டுக்கொள்ளப்படலாம்.

26–4–2006–ஆம் நாளிட்ட உள் துறையின் அ.சா.கு. எண். 19790/genl/2006–1–ல் பதில்கள் பெறப்பட்டன.

*குழுவின் கருத்துரைகள்*

*(9)*

ஆயத் தீர்வை நிலுவைத் தொகை ரூ.1.50 லட்சம் 1982 ஆம் ஆண்டிலிருந்து நீண்டகாலமாக நிலுவையில் உள்ளதால் இத்தொகையினை விரைந்து வசூல் செய்ய தூரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென குழு விரும்புகிறது.

## இணைப்பு

(தொடர் எண்.4.1 பரிந்துரை எண்.3 பத்தி 3.4)

துறை மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கை

விதிகளுக்கு பொருள் விளக்கங்கள் அளிக்கப்பட்டமை காரணமாக "ஏனைய மாநில வண்டிகளுக்கு வழங்கப்பட்ட தற்காலிக அனுமதிகளுக்காக, கட்டணம் துறைக்கு வசூலிக்கப்பட்டமை என்பது தொடர்பாக மாநிலங்களுக்குத் துறைத்தலைவர் மறுப்புரைகளை எழுப்பியுள்ளார். 1988 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் விதிதுறைகளின் கீழ் அல்லது அதன்கீழ் இயற்றப்பட்ட விதிகளின் கீழ் ஏனைய மாநில சரக்கு வண்டிகளுக்கு தற்காலிக அனுமதி வழங்குவதற்காக, கூடுதல் கட்டணம் எதுவும் விதிக்க வழி வகை இயலாத காரணத்தால், எந்த வகையிலும் வருவாய் இழப்பு ஏற்படவில்லை. ரத்து செய்யப்பட்ட தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளைச் சேர்ந்த 167 (1) விதியின்படி, மாநிலத்திற்குள் இயங்கும் சரக்கு வண்டிகளுக்கு அனுமதி வழங்குவதற்கு, அனுமதிக் கட்டணம் வசூலிக்கத்தக்கதாகும். தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளைச் சேர்ந்த 167 (iii) விதியின்படி, எல்லாவகையிலும் நிறைவு பெற்ற அனுமதி வழங்கும்போது இத்தகைய மாநிலத்திற்குள் இயங்கும் சரக்கு வண்டிகளுக்கான கூடுதல் கட்டணம் வசூலிக்கத்தக்கதாகும். தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதியைச் சேர்ந்த (காண்க) 168 ஆம் விதியில் தற்காலிக அனுமதி வழங்குவதற்காக கட்டணம் வரையறுக்கப்பட்டுள்ளது: அவை, 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தில் (1988 ஆம் ஆண்டு புதிய மோட்டார் வண்டிகள் சட்டத்தைச் சேர்ந்த 87–ஆம் பிரிவு 62–ஆம் பிரிவின் கீழ். வசூலிக்கத்தக்கதாகும். தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளைச் சேர்ந்த 167 (iii) விதியில் இக்கூடுதல் கட்டணம் விதிக்க வகை செய்யப்பட்டுள்ளது. (1980 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளின் 279 ஆம் விதியில் தொடர் எண்.7) வட்டாரப்போக்குவரத்து அதிகாரிகளின் மூலம். மாநிலத்திற்குள் இயங்கும் வண்டிகளுக்கு சரக்கு கட்டணம் அனுமதிகள் வழங்கும்போது, விதிக்கும் அரசுக்கு இக்கட்டணம் கிடைக்கும் வருவாய் ஆதாரமாக அமைகிறது. இந்த விதித் துறைகள் 1939 ஆம் மோட்டார் வண்டிகள் சட்டத்தில் 62 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்படும் தற்காலிக அனுமதிகளுக்கு பயன்படுத்தக் கூடாது. ஏனெனில் எந்தவொரு சட்டத்தின் கீழ் அல்லது தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளைச் சேர்ந்த எந்தவொரு விதித்துறைகளின்கீழ் அந்த நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. எனவே, அவ்வகையாக அந்தந்த மாநிலங்களுக்கான வழக்கமான அனுமதியின் கீழ் வரும் ஏனை மாநில வண்டிகளுக்கு வழங்கப்படும் தற்காலிக அனுமதிகளுக்கான கூடுதல் கட்டணம் எதுவும் வசூலிக்கப்படுவதில்லை. எனவே, மாநிலத்திற்குள் இயக்கக்கூடிய சரக்கு வண்டிகளுக்கும், ஒப்பந்த வண்டிகளுக்கும் வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகள் ஐந்தாண்டு செயல்திறன் உள்ள எல்லா வகையிலும் நிறைவு பெற்ற அனுமதியை வழங்கும்போது கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஆனால், மோட்டார் வண்டிகள் ஆய்வாளர்கள் மூலம் 7 நாட்கள் மட்டுமே செயல்திறன் உள்ள தற்காலிக அனுமதிகள் வழங்கப்படுகின்றன. அந்த வகையிலான தற்காலிக அனுமதிகள் வழங்கப்படுவதற்கு, 1988 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் கீழ், அல்லது தமிழ்நாடு 1988 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகள் கீழ் கூடுதல் கட்டணம் எதுவும் வரையறுக்கப்படவில்லை. எனவே, சோதனைச் சாவடிகளில் ஏனைய மாநில வண்டிகளுக்கு கூடுதல் கட்டணம் வசூலிப்பது என்ற பிரச்சனை எழவில்லை.

சோதனைச்சாவடிகளில் ஏனைய மாநில சரக்கு வண்டிகள், ஒப்பந்த வண்டிகள், ஆகியவற்றிக்கு தற்காலிக அனுமதிகள் வழங்கப்படும்போது, கூடுதல் கட்டணம் எவையும் வசூலிக்கத் தேவை இல்லை என்ற கருத்தை மாநில கணக்கு துறைத் தலைவர் ஒப்புக்கொண்டதுடன், இனி இத்தகைய தன்மை வாய்ந்த மறுப்புரைகள் மீது மேற்கொண்டும் நடவடிக்கை தொடரப்படாது என்றும் தெரிவித்துள்ளார்.

அதக்கிணங்க, இந்த துறையில் பல்வேறு வட்டாரப் போக்குவரத்து அலுவலங்களில் தணிக்கை அறிக்கைகளில் கட்டிக்காட்டப்பட்ட 1996–97, 1997–98, 1998–99, 1999–2000 ஆகிய ஆண்டுகளுக்கான ரூபாய் 3198 இலட்சம் மதிப்புள்ள கூடுதல் கட்டணங்கள் (பிற மாநிலட சரக்கு வண்டிகள், ஒப்பந்த வண்டிகள் ஆகியவற்றிற்கு வழங்கிய தற்காலிக அனுமதிகள் மற்றும் சோதனைச் சாவடிகள் ஆகியவற்றுக்குறியவை) வசூலிக்காதது/ குறைவாக வசூலித்தது தொடர்பாக பதிலளிக்கப்படாமலுள்ள அனைத்து மறுப்புரைகளையும் மாநில கணக்குத் துறைத்தலைவர் மேற்கொண்டும்

நடவடிக்கை எடுக்காமல் அதனை கைவிட்டுள்ளார் (மாநிலக் கணக்குத் துறைத்தலைவரின் 23–11–2000 ஆம் நாளிட்ட (AG (Au) / II/ISR. V/MVT/–1 /21–42 /98–99/2000–2001/259 ஆம் எண்ணுள்ள கடிதத்தைக் காண்க:–

எனவே அரசின்– முடிவை மாநிலக் கணக்குத் துறைத்தலைவர் ஏற்றுக் கொண்டிருப்பதைக் கருத்தில்கொண்டு வழங்கப்பட்ட தற்காலிக அனுமதிகளுக்கான கூடுதல் கட்டணங்களை வசூலிக்காதது/குறைவாக வசூலித்தது தொடர்பான மறுப்புரைகளைத் (அவை பொதுக் கணக்குகள் குழுவின் 1995–96 ஆம் ஆண்டு வரையிலான (அறிக்கைகளில் சேர்க்கப்பட்டிருந்தன) தீர்வு காண்பதற்காக கருதிப் பார்க்கலாம். தற்காலிக அனுமதிகள் வழங்கியதற்காகவும், சோதனைச் சாவடிகளுக்காகவும் கூடுதல் கட்டணங்கள் வசூலித்தது குறித்து போக்குவரத்துத் துறைக்கு, மாநில கணக்குத் துறைத் தலைவருக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்படுவதைத் தவிர்பதற்காக, (உள்–போக்குவரத்து–1) துறையின் 7–7–93 ஆம் நாளிட்ட 1015 ஆம் எண் அரசாணையில் ரூபாய் 35.89 இலட்சத்தை வசூலிக்க இயலாத அரசு வருவாய் எனத் தெரிவித்து, அத்தொகையை அரசு கணக்கிலிருந்து தள்ளுபடி செய்து ஆணைகள் பிறப்பித்திருப்பது இது தொடர்பாக சுட்டிக்காட்டப்படுகிறது.

உண்மையில் வருவாய் இழப்பு எதுவும் இல்லாததால், தள்ளுபடிசெய்ய, அல்லது கணக்கிலிருந்து தள்ளிவிட ஆணைகள எதுவும் பிறப்பிக்கத் தேவையில்லை. எனவே, நிலவுகின்ற சூழ்நிலையை குழு கருதிப் பார்க்கலாம். பிற மாநில சரக்கு வண்டிகளுக்கும், ஒப்பந்த வண்டிகளுக்கும், தற்காலிக அனுமதிகள் வழங்கியதற்காக, கட்டணங்களைக் குறைவாக வசூலித்தது தொடர்பான மறுப்புரைகளைத் தீர்வு காண்பதற்காக கருதிபார்க்கலாம்.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பொதுக் கணக்குக் குழு


(2012 - 2013 )

நூற்று ஆறாவது அறிக்கை

(பதினான்காவது பேரவை)

பிழை திருத்தப் பட்டியல்

| வரிசை எண். | பக்கம் எண். | பத்தி எண். | வரி எண் | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | 3 | (6) | 1 | Furtehr | Further |
| 2. | 7 | (5) | 10 | எனேவ | எனவே |
| 3. | 8 | (5) | 7 | சட்டதில் | சட்டத்தில் |
| 4. | 24 | (6) | 1 | Trasnport | Transport |
| 5. | 24 | (8) | 1 | Fruther | Further |
| 6. | 38 | (7) | 1 | ஏற்பட | ஏற்பட்ட |
| 7 | 38 | (6) | 17 | பொள்ளாளச்சி | பொள்ளாச்சி |
| 8. | 40 | இணைப்பு | 21 | ஏனை | ஏனைய |
| 9. | 40 | இணைப்பு | 36 | மாநிலட | மாநில |
| 10. | 41 | இணைப்பு | 46 | தவிர்பபதற்காக, | தவிர்ப்பதற்காக, |
| 11. | 41 | இணைப்பு | 51 | ஆணைகள | ஆணைகள் |


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS